Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

இலவசப் பிரதி

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஓட்டோ சப்ளயர்ஸ்



மிகத் துல்லிய
ரீபோறிங் ரீகிறைன்டிங்
வேலைகளுக்கும்
அனைத்து Japan போல்
பெயரிங்குகளுக்கும்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021-2222047
(சி/004)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 18 ஆம் நாள் (04.10.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 04

வவுனியாவில் பரபரப்பு

## காணாமற்போன யுவதி எலும்புக்கூடாக மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா, முருகனூர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் பத்து வயது மதிக்கத்தக்க சிறுமியின் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டுடெடுக்கப் பட்டுள்ளது

வவுனியாவில் கோயில் குளத்துக்கு ...ங்காக உள்ள முருகனூரிலிருந்து ரகுலேந்திரன் சசிப்பிரியா (வயது 11) என்ற சிறுமி கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதியிலிருந்து காணாமற் போயிருந்தார்.

நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப் பட்ட எலும்புக்கூட்டுக்கு அருகில் காணாமற்போன அச்சிறுமி கடைசி

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சீருடையில் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா நிருபர்)

அமெரிக்க இராணுவத்தின் கிரீன் பரேட் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் வன்னியின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் முன்னரங்க நிலைகளுக்கு விஜயம் செய்துள்ளனர். அமெரிக்க இராணுவச் சீருடையில் காணப்பட்ட இவர்கள் ஓமந்தை, தம்பமடு, கல்மடு, பூவரசங்குளம் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் பாதுகாப்பு முன்னரங்குகள், பயிற்சி முகாம்களைப் பார்வையிட்டதாக அறியவருகிறது.

மிகுந்த இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் குளிரூட்டப்பட்ட வாகனத்தில் இராணுவ வாகனங்கள், இராணுவ மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ வவுனியாவின் வீதியொன்றினூடாகச் சென்றபோது பொதுமக்கள் இவர்களைக் கண்டுள்ளனர்.

அமெரிக்காவின் 'கிரீன் பரேட்' ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு நீண்டகாலமாகப் பயிற்சி வழங்கிவந்துள்ளனர். இவர்கள் பொதுவாக வெளிப்படையாகத் தமது இராணுவச் சீருடையுடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் செல்வது மிக அரிதாகும்.

ஆனால் இதற்கு முன்னர் விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவு

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்க ரணிலிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை!

## போராட்டத்திற்கு ஆதரவும் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்தத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரணில் அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.**

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவிலே யுத்தநிறுத்தம் காரணமாகப் போர் தணிந்து ஒரு அமைதிச்சூழல் ஏற்பட்டு அனைத்து மக்களும் ஒரு இயல்பு வாழ்க்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற இக்காலப்பகுதியில் தென்னிலங்கைச் சிறைகளிலே பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் எதுவித விசாரணைகளுமின்றி பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற கடுமையான அடக்குமுறைச் சட்டவிதிகளின் கீழ் நீண்டகாலமாக சிறை வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் காலப்பகுதிகளிலும் எம்மிடம் தடுப்புக்காவலில் இருக்கின்ற யுத்தக் கைதிகள் காலத்திற்குக்காலம் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் தென்னிலங்கை சிறைகளிலே வாடுகின்ற அப்பாவி தமிழ் இளைஞர் யுவதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## தமது இரு உறுப்பினர்களையும் பிணையில் எடுக்க புலிகள் சம்மதம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் படையினரால் கைதாகி தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலைப் புலிகளையும் பிணையில் எடுக்க விடுதலைப்புலிகள் இணங்கியுள்ளதாக போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட பிரதிநிதி டெய்ரூர் டொக்கில்ஸன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் இந்த இணக்கப்பாடு குறித்து இவர் சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இதேவேளை கைதான இரு விடுதலைப் புலி உறுப்பினர்களும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கும்புறுப்பிட்டி முகாமிற்கு நேற்று போர் நிறுத்தக கண்காணிப்புக்குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவை உறுப்பினர்களும் விஜயம் செய்தனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு புலி உறுப்பினர்களும் தமக்கு எவ்வித தீங்கும் இல்லாதிருப்பதாக எம்மிடம் கூறினர் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி தெரிவித்தார்.



யாழ். செயலகக் கலந்துரையாடலில் தெரிவுக்குழு.

### விண்ணாணம் விநாசியர்



கிறீன் பரேட்காரங்கள் சமாதானப் பசுவின்ரை கொம்பிலையா பால் கறக்கப் பாக்கினம்!

## படையினரை விடுவிக்குக சிங்களவர் உண்ணாவிரதம்

திருமலை நகர மத்தியில்

(திருமலை நிருபர்)

திருகோணமலை வில்கம் விகாரை காட்டுப்பகுதியில் புலிகளால் கைது செய்யப்பட்ட ஆறு படையினரையும் விடுவிக்குமாறு கோரி நேற்று திருமலை நகரத்தில் சிங்கள மக்கள் உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் திருமலை நகர மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் சுமார் பதினைந்து சிங்கள மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினால் மத்திய வீதி, கடற்படைத் தள வீதி, கோட்டை வீதி ஆகிய வீதிகளூடான போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்திருந்தன.

வில்கம் விகாரை காட்டுப் பகுதியில் அண்மையில் ஏழு படையினர் புலிகளால் அத்துமீறி வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதானதும் அவர்களில் ஒரு படை வீரர் நேற்று முன்தினம் மனிதாபிமானரீதியில் விடுவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

## கைதிகள் உண்ணாவிரதம் தொடர்கிறது அமைச்சர்கள் எவரும் செல்லவில்லை

(கொழும்பு நிருபர்)

களுத்துறையில் தமிழ்க்கைதிகளின் உண்ணாவிரதம் நேற்று மூனறாவது நாளாகவும் தொடர்ந்தது. உண்ணாவிரதம் இருக்கும் இக்கைதிகளை நேற்றுவரை அமைச்சர்களோ, அதிகாரிகளோ, எம்.பிக்களோ சென்று சந்திக்கவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதேசமயம் - தமிழ்க்கைதிகள் கோரிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மிலிந்த மொறகொட தாம் சிறைச்சாலைக்குச் சென்று சிறைக்கைதிகளைச் சந்திக்க பிரதமரிடமிருந்து எந்த உத்தரவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் பிரதமரிடமிருந்து அனுமதி கிடைத்தால் தாம் கைதிகளை சென்று சந்திக்கத் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - உள்நாட்டு அலு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றின் மனித உரிமை தெரிவுக்குழு நேற்று யாழ். விஜயம்

### காணாமற்போனோர் பெற்றோரையும் சந்திப்பு

(நமது நிருபர்)

புதிதாக அமைக்கப்பட்ட மனித உரிமைகள் தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். இவர்கள் நேற்று யாழ் செயலகத்தில் தமது குழுவின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

இதுவரைகாலமும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் பாராளுமன்ற ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பெயரில் மனித உரிமைக்கான தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதன் தலைவராக தொழில் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் அக்குழுவின் உறுப்பினர்களாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும், பாராளுமன்ற உறுப்பினர்களான வி.புத்திரசிகாமணி, குமார நாணயக்கார, லக்ஸ்மன், ராஜகுரு கொலிரே, சம்பந்தன் ஆகியோரும் இடம்பெற்றனர்.

இவர்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். செயலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு தமது நிலைப்பாட்டை விளக்கினர். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்றின் குணதிலக என்போரும் வருகைதந்திருந்தனர். இவர்களின் கலந்துரையாடல் ஒன்று அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இன்றைய சிறப்பிதழ்
சிநேகிதியே..!
உள்ளே...

இணையத்திலும்
"நமது ஈழநாடு"
www.eezhanadu.com

# அபிவிருத்தி, புனர்வாழ்வுக்கு துரித நடவடிக்கை; மூன்று மட்டங்களில் செயற்குழுக்கள் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கையின் முதற்கட்டமாக வெவ்வேறான மூன்று மட்டங்களில் செயற்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

நேற்றுமுன்தினம் கொழும்பில் பிரதம மந்திரியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி விடயம் குறித்து ஆராயப்பட்டது. அரச அதிபர்கள் மற்றும் பல அமைச்சர்கள் அரசின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட மேற்படி கூட்டத்தில் RRR செயற்றிட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று ஆலோசிக்கப்பட்டது. வெவ்வேறு தரப்புக்களில் இருந்தும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியான செயற்குழுக்கள் அமைப்பது என்றும் தேசிய மட்டத்தில் செயற்படக்கூடிய வகையில் வேறு ஒரு குழுவும் அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இவை இரண்டு குழுக்களின் செயற்றிட்டங்களை கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் என மேலும் ஒரு உயர் மட்டக்குழுவும் அமைக்கப்படவுள்ளது. மேற்படி குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் ஆளணிகளை ஒழுங்கு செய்வது குறித்தும் கடமைகளை வரையறை செய்வது குறித்தும் அதிகாரிகள் மட்டத்தில் தற்போது ஆராயப்பட்டுவருகிறது.(க)

## நாவற்காட்டில் குளங்கள் புனரமைப்பு

(நாவற்காடு)

நாவற்காடு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பழுதடைந்த குளங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட இக்குளங்களை அவ்வூர் மக்கள் ஒன்று சேர்ந்து திருத்தியுள்ளனர். இதனால் அப்பகுதி விவசாயிகளும் கால்நடைகளும் நன்மை அடைந்துள்ளன. (92)

# சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் துரிதப்படுத்தல் அவசியம்

## நீதி, மறுசீரமைப்பு அமைச்சர் லொக்குபண்டார கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவரும் இந்த சூழ்நிலையில் நாடுமுழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரிப்பது துரிதப்படுத்தப்படுதல் அவசியம் என்று நீதி, மறுசீரமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார்.

களுத்துறை மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை பற்றிக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

சிறைக்கைதிகளின் நிலை பற்றி உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கேட்டபோது சட்டமா அதிபர் திணைக்களமே இதற்கான முடிவினை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# மண்டைதீவு நினைவு தூபி முற்றாக அழிந்துள்ளது

மண்டைதீவின் செம்மண் தோட்டவெளியில் அமைக்கப்பட்டிருந்த நினவுத்தூபி இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை விவசாயிகள் தமது தோட்ட நிலங்களைப் பார்வையிடுவதற்காக படையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். தோட்ட நிலங்களைப் பார்வையிட்ட விவசாயிகளே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தப் பகுதி தற்பொழுது ஒரு விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டுள்ளதுடன் தற்காலிக 'பவிலியன்களும்' அமைக்கப்பட்டுள்ளன. (54)

## பரிசளிப்பு விழா

(மருதனார்மடம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு.க.கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிப்பார். (89)

## சுற்றுலாப் பயணிகளினால்

# முந்திரிகைப் பழத்துக்கு கிராக்கி அதிகரிப்பு!

(ஊரெழு)

தென்பகுதியில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவு முந்திரிகைப்பழங்களை வாங்கிச் செல்வதால் இந்த வருடம் ஊரெழுப்பகுதியில் முந்திரிகைச்செய்கை பெருமளவு அதிகரித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தோட்டப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பழங்களைக் கொள்வனவு செய்வதால் அப்பகுதி விவசாயிகள் தோட்டத்திலேயே கடை அமைத்து விற்பனை செய்துவருவதாகவும் அறிய முடிகின்றது.

இது தவிர அப்பகுதி விவசாயிகள் காலபோக மழையை அடுத்து கத்தரி, மிளகாய், புகையிலை போன்றவற்றுக்கான நாற்றுமேடைகள் அமைத்தும் வருகின்றனர்.(96)

# முழுமையாகத் திருத்தப்படாதுள்ள மிருசுவில் – சுட்டிபுரம் வீதி!

(நாவற்காடு)

மிருசுவில் தென்மராட்சிப் பிரதேசத்தில் சுட்டிபுரம் மிருசுவில் வீதி அரைகுறையான புனரமைப்பு நடவடிக்கையோடு கைவிடப்பட்டுள்ளது.

இவ்வீதி 5 கி.மீ. தூர நீளத்தினைக் கொண்டுள்ளது. இதில் 3 கி.மீ. தூரம் வரை செப்பனிடப்பட்டு ஒரு தடவை மட்டும் தார் ஊற்றப்பட்டிருக்கிறது. மிகுதி 2 கி.மீ. தூரம் எவ்வகையான புனரமைப்பிற்கும் உட்படுத்தப்படவில்லை.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் பெருமளவான மக்கள் இந்த வீதியை பாவனைக்கு உட்படுத்தி வருகின்றனர். ஆனால் இன்னும் சிறிது காலத்தில் இந்த வீதியில் அமைந்திருக்கும் பாலத்தில் ஒன்று பாதிப்பிற்குள்ளாகி போக்குவரத்துகள் தடைப்படும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியால் நான்கு கிராம சேவையாளர் பிரிவைக்கொண்ட மக்கள் தினமும் பிரயாணம் செய்கின்றார்கள் என்பதும் இரு பாடசாலைகள் அப்பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (92)

# சாட்டி கடற்கரைப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை

(புலோலி)

சாட்டி கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை நடைபெற்று வருகிறது.

தென்பகுதி மற்றும் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவது அதிகரித்துள்ளமையால் மதுபான விற்பனையும் அமோகமாக நடைபெறுகிறது எனவும் -

இதற்கான தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் தெரியவருகிறது. (15)


## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

மழை காலத்துக்கேற்ப Rain கோட்ஸ், நுளம்புவலை, தொப்பி, குடை மற்றும் பயணத்துக்கான, பாடசாலைக்கான Bags மலிவு விலையில். **வேலும் மயிலும் Fancy Goods,** இல.54, நவீன சந்தை, யாழ். (சி/031)

SONYO Multi Handsel - 5 km (clt-98Tc) Japan விற்பனைக்கு உண்டு. 535, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.:021-2223480. (சி/007)


## போர் அழிவுகளினால்

# மனித உரிமையைக்கூட பாதுகாக்க முடியவில்லை

## கொட்பிறின் குணதிலக கவலை

(நமது நிருபர்)

போர் அழிவுகளினால் யாழ். சமூகத்தினர் வலுவிழந்து சாதாரண மனித உரிமையைக்கூட பாதுகாக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என நேற்று யாழ்ப்பாணம் வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறின் குணதிலக கருத்துத் தெரிவித்தார்.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றி குணதிலக உரையாற்றினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் மனித உரிமை ஆணைக்குழு கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் திரட்டிய விபரங்களை வைத்து அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளோம்.

மனித உரிமையை பாதுகாக்க வேண்டிய நிறுவனங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் போர்ச் சூழ்நிலை நிலவிய காலத்தில் எம்மால் சுதந்திரமாகச் செயற்பட முடியாதநிலை காணப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் நாம் சுதந்திரமாக செயற்படமுடிவதால் மாகாண ரீதியான எமது செயற்பாடுகளை வலுவாக்கவுள்ளோம் என்றார். (உ)

## உழவு இயந்திரம் தடம் புரண்டது!

(மல்லாகம்)

நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் இருந்து தென்னை மட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்த உழவு இயந்திரம் மீசாலை மடத்தடியில் தடம்புரண்டது.

இதில் தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் இச்சம்பவத்தால் வீதிப் போக்குவரத்தில் சிறிதுநேரம் தடங்கல் ஏற்பட்டது எனவும் தெரியவருகிறது. (68)

## மரக்கறி விலை வீழ்ச்சி

(மருதனார்மடம்)

மருதனார்மடம் சந்தையில் கடந்த சில தினங்களாக மரக்கறிகளின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 10 ரூபாவாகவும் பயிற்றங்காய் 10 ரூபாவாகவும் வெண்டிக்காய் 7 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

இவ்விலை வீழ்ச்சியால் தமது முதலீடுகளில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (89)

## தென்மராட்சியில் மீள இயங்கும் மாதர் சங்கங்கள்

(நாவற்காடு)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதர்சங்கங்கள் சில மீண்டும் இயங்கத்தொடங்கி விட்டன.

அண்மைக்கால இடம்பெயர்வினால் இயங்கமுடியாதிருந்த இச்சங்கங்கள் தற்போது மீளக்குடியமர்ந்த நிலையில் செயற்படத் தொடங்கியிருக்கிறது. இவை சுழற்சிமுறையில் கடன் வழங்கிவருகின்றன. தற்போது செயற்படாமல் இருக்கும் சங்கங்களும் விரைவில் செயற்படும் எனவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (92)


## முதியோரை மகிழ்வித்தல்

எதிர்வரும் 2002.10.05ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை முதியோர்கள் உபசரித்து மகிழ்விக்கப்பட உள்ளார்கள்.

சங்க மண்டபத்தில் பட்டிமன்றம், தமிழ்இனி ஒலி-ஒளிப்பேழை திரையிடல், மழலை அமுதம் கவிதைகள் ஒலித்தல், பதிவு செய்யப்பட்ட பேச்சுக்கள் செவிமடுத்தல், கட்டுரை வாசித்தல், பாடல்கள் இசைத்தல், முதுமையின் அனுபவங்கள் பகிர்தல் என்பன ஊடாக உள்ளங்களும் உணர்வுகளும் சங்கமிக்கும்.

*"இன்றைய முதியோர் நேற்றைய இளைஞர்"*

பணிப்பாளர்களும் பணியாளர்களும்
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.

(சி/029)

## பயிற்சி வகுப்புகள்

கிராம அலுவலர் (G.S)
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்.
**புதிய பிரிவுகள்**
சனி - காலை 10.00 மணி
ஞாயிறு - மாலை 10.00 மணி
ஆரம்பம்: 05.10.2002

நியூட்டன் உயர்கல்வி நிறுவனம்,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(003)

## யா/இராமநாதன் கல்லூரி இந்து மாமன்றத்தால் நடாத்தப்படும்

## திருமுறை விழா - 2002

காலம் : 04-10-2002 வெள்ளி காலை 9.30மணி
இடம் : கல்லூரி பிரதான மண்டபம்
தலைவர் : செல்வி சந்திரசேகரம் அனுஷா

*ஆசியுரை*
அருட்கவி.சி.விநாசித்தம்பி (M.A.)
(தலைவர், இந்துசமயப் பேரவை)
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர்)

*பிரதம விருந்தினர்*
திரு.மா.வேதநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

*சிறப்பு விருந்தினர்கள்*
திரு.அ.தற்பரானந்தன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)
திருமதி வை.கணேசபிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இந்துமாமன்றம்,
யா/இராமநாதன் கல்லூரி.

(சி/032)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கீரிமலை மாசடைகிறது

(ஏழாலை)

பிற இடங்களிலிருந்து கீரிமலைக்குச் செல்லும் உல்லாசப் பயணிகள் அப்பகுதியை அசுத்தப்படுத்தி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிப் பொதுமக்கள் பாவனைக்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் அண்மையில் புதிதாக சில மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருந்தும் அங்கு செல்லும் உல்லாசப் பயணிகள் அந்தப் மலசலகூடங்களை உரிய முறையில் பயன்படுத்தாது அருகிலுள்ள கட்டடங்களை மலசலகூடங்களாக பயன்படுத்தி வருவதால் அங்கு செல்லும் ஏனைய உல்லாசப் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (93)

### வீட்டில் இருந்து 'டெக்' திருட்டு

யாழ். புதுவீதி கொய்யாத்தோட்டப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெறுமதிவாய்ந்த 'டெக்' திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் செவ்வாய் இரவு இடம்பெற்றுள்ளது. வீட்டு உரிமையாளர் தனது கடையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தை அவதானித்த திருடர்கள் உள்ளே நுழைந்து பெறுமதி வாய்ந்த 'டெக்'கை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டு தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக எவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சேவை தினத்தையொட்டி மானிப்பாய் வட்ட, திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகங்கள், தென்னிந்தியத் திருச்சபையுடன் இணைந்து பல்துறை மருத்துவ நிபுணர்களின் ஆதரவுடன் மாபெரும் இலவச மருத்துவமுகாமை நடத்தவுள்ளன.

நாளைமறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறும். இவ் இலவச மருத்துவ முகாமில் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய மருத்துவ நிபுணர்கள் பலர் கலந்துகொண்டு நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

### விபத்தில் இருவர் காயம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியில் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் இராணுவ ட்ரக்கும் ஓட்டோவும் விபத்துக்குள்ளானதில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர்.

சங்கரப்பிள்ளை ஸ்ரீகந்தராஜா (வயது 41) வீரசிங்கம் ஜெயரூபன் (வயது 26) ஆகியோரே காயப்பட்டவர்களாவர். அவர்களிருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (23)

### ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று காலை 9.30 மணிக்கு ஆசிரியர் தினம் கொண்டாடப்படவிருக்கிறது.

மாணவர் தலைவர் கோபிறமணா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவிருப்பதோடு, கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெறும். (90)

### ரூ.183 மில்லியன் தேவை

(மீசாலை)

தென்மராட்சியின் மின்சார அபிவிருத்திப் பணிகளுக்காக 183 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தகாலப் போர் நடவடிக்கையின்போது சேதமடைந்த மின் கம்பங்கள், கம்பிகள் மற்றும் மின்சார உபகரணங்கள் சேதமடைந்துள்ளதால் அவற்றைச் செப்பனிடும் பணி நடைபெற்றுவருகிறது. (25)

## அரசு - புலிகள்

# இறுதிக்கட்ட சமாதான தீர்வுக்கு சென்றால் பொருளாதாரம் பெரும் மாற்றம் காணும்!

## மத்திய வங்கித் துணை ஆளுனர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் என்றாலும், பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான கயிற்றிழுப்பில், மத்திய வங்கி எந்த ஒரு பக்கத்தையும் சார்ந்து கொள்ளாது என்று அதன் துணை ஆளுனர் டபிள்யூ.ஏ. விஜயவர்த்தனா தெரிவித்தார்.

"நாங்கள் சுதந்திரமாகச் செயற்படுகிறோம் நாங்கள் கட்சிக்காக வேலை செய்பவர்கள் அல்ல" என்று வலியுறுத்திக் கூறினார் துணை ஆளுனர்.

இரத்தக்களரிக்கு முடிவுகட்டும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இறுதிக்கட்ட சமாதானத் தீர்வுக்கு அரசாங்கம் செல்லுமானால் நாட்டினுடைய பொருளாதாரம் மிகப்பெரியளவில் மாற்றம் காணும். உண்மையான சமாதானம் ஏற்படுமானால் 2003இல் ஆறு சதவீத பொருளாதார வளர்ச்சியை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்ட மத்திய வங்கியின் துணை ஆளுனர், எதிரும் புதிருமான கட்சிகளின் அரசியல் அதிகார இழுபறிகளால், சமாதான சூழலிலும் எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சிப் போக்கை தரிசிக்க முடியாமல் உள்ளமையையும் கவலையுடன் சுட்டிக்காட்டினார்.

## மாலதி படையணி உருவாக்கிய 'வெஞ்சமரின் வரிகள்' ஒலிநாடா!

### 10 ஆம் திகதி வெளியீடு

(வவுனியா நிருபர்)

எதிர்வரும் 10ஆம் திகதி கிளிநொச்சியில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வில் 'வெஞ்சமரின் வரிகள்' என்ற பாடல் ஒலிநாடா வெளியிடப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாலதி படையணிப் போராளிகளினால் உருவாக்கப்பட்ட வெஞ்சமரின் வரிகள் என்ற இப்பாடல் ஒலிநாடா பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கம்பஹாவில் சுதந்திரக்கட்சியின் செல்வாக்கு வெகுவாக வீழ்ச்சி!

(நமது நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையாக விளங்கிய கம்பஹா மாவட்டத்தில் மிகத் தீவிரமான வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக கம்பஹா மாவட்டத்தில் கிராமப்புறங்களிலிருந்து கிடைக்கும் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

கம்பஹா மாவட்டத்தின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான றெஜி ரணதுங்காவின் மாவட்ட அலுவலகத்திலும், வசிப்பிடத்திலும் முன்னர் பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு பல்வேறு தேவைகளுக்காகவும் கட்சிக் காரியங்களிலும் ஈடுபடுவதற்காகவும் காத்துக்கிடப்பது வழமை என்றும் - தற்போது அவ்விடயங்கள் பெரும்பாலும் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் - கம்பஹாவின் கிராமப்பகுதிகளிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டுள்ள கம்பஹா மாவட்ட மக்கள் சமாதான முயற்சிகளில் முறிவு ஏற்படுமானால் அது முழுத் தீவுக்குமே பெரும் சாபக்கேடாக அமையும் எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் 19 ஆவது யாப்புச் சீர்திருத்தம் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் பிரதமரின் முயற்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அச்சீர்திருத்தம் பற்றி சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்றும் - அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் அறிந்து கொள்ளக் கூடியவகையில் தங்கள் பிரமுகர்களின் பரப்புரைகள் இடம் பெறவில்லை என்றும் -அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறுமி கொலை வழக்கு இருவருக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவடி வேம்பு பகுதியில் சிறுமி மீது பாலியல் பலாத்காரம் புரிந்து கொலை புரிந்ததாக சந்தேகிக்கப்படும் இரு நபர்களும் மட்டக்களப்பு நீதவானினால் பதினைந்து நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு நபர்களும் விடுதலைப் புலிகளிடம் சிக்கியதையடுத்து விசாரணைகளின் பின் இவ்விருவரும் ஏறாவூர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். வந்தாறுமூலையைச் சேர்ந்த கமல் என்றழைக்கப்படும் ஜோர்ஜ் முனியசிங்கம் மற்றும் கமலேந்திரன் ஆறுமுகம் ஆகிய இருவருமே இச்சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## அரியாலை ஆயுத விவகாரம்:

# சந்தேக நபர் மீது தடுப்புக்காவல் உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் வெடிபொருட்களையும் ஆயுதங்களையும் மறைத்து வைத்திருந்தவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரியாலையில் உள்ள தனது வீட்டில் மலகூடக் குழியில் காணப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக உரிய வகையில் தகவல் கொடுக்காமல் இருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்ததையடுத்தே நீதிமன்றம் மேற்படி உத்தரவை விடுத்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த அருள் ஞானசீலன் என்பவருக்கே யாழ். நீதிவான் நீதிமன்றம் தடுப்புக்காவல் உத்தரவை பிறப்பித்துள்ளது.

### போட்டிப்பரீட்சை

(பாண்டியன்தாழ்வு)

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாக போதனாசிரியர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் உரியவர்களிற்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சை ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (65)

# தேசிய கல்வியியற் கல்லூரி உலக ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆசிரியர்தின விழா கலாசார மன்றத் தலைவர் சு.ப.கயேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன், இதுவரை காலமும் யாழ்.மண்ணில் தேசிய கல்வியியற் கல்லூரி தோற்றம் பெறவும், வளர்ச்சிபெறவும் காரணமாக இருந்த பிரதம அதிதியை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதற் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

அத்துடன் விசேட நிகழ்வுகளாக ஆசிரிய வாண்மை மேம்பாட்டுடன் இணைவுற்ற யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியின் வெளியீடாக 'படி 3' இதழ் வெளியீடும் நிகழவுள்ளது.

# அச்சுவேலிப் பாடசாலைக்கு பிரார்த்தனை மண்டபம்

## அமைச்சர் உறுதிமொழி

(ஆவரங்கால்)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரிக்கு புதிய பிரார்த்தனை மண்டபம் ஒன்றை அமைத்துத் தருவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

பாடசாலையின் பரிசில் வழங்கும நாள் நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோதே அமைச்சர் மகேஸ்வரன் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ். மறை மாவட்ட பேராயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகமும் கலந்துகொண்டிருந்தார்.(86)

# பழைய கட்டிடங்கள் கற்களுக்காக உடைப்பு!

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, வடக்குப் பகுதிகளில் சேதமடைந்த சுண்ணாம்புக் கட்டிடங்கள் கல்லுக்காக உடைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேசத்தில் தற்பொழுது கல்லின் விலை வெகுவாக உயர்வடைந்துள்ளதால், கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்கள், இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த சுண்ணாம்புக் கட்டிங்களை வாங்கி உடைத்து கற்களை எடுப்பதனைக் காணமுடிகின்றது.

இவ்வாறு எடுக்கப்படும் கற்களின் விலை மலிவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (83)

## சின்னஞ்சிறு செய்திகள்

### திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் வீடொன்றில் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், உதிரிப்பாகங்கள் அகற்றப்பட்ட நிலையில் வீதியில் அநாதரவாக விடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சில தினங்களுக்கு முன்னர் தனது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டமை குறித்து அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் பிரதான வீதியில் முக்கிய உதிரிப் பாகங்கள் அகற்றப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### வீடுகள் மீது கல்வீச்சு!

(கரணவாய்)

கரணவாய் தெற்கு செல்வாபுரம் கிராமத்தில் சமீபகாலமாக இரவில் வீடுகள் மீது கற்கள் வீசப்படுவதாக தெரியவருகின்றது.

விஷமிகள் சிலரால் வீடுகள் மீது நடத்தப்படும் கல்வீச்சு தொடர்பாக குறித்த நபர்களைக் கண்டறியும் நோக்குடன் பொதுமக்கள் தீவிரமான முயற்சியில் இறங்கியுள்ளனர். (22)

### குரங்குகள் செய்யும் அட்டகாசம்!

(இயற்றாலை)

மந்துவில், வரணி, இயற்றாலை, தாவளை ஆகிய பகுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கூட்டம் கூட்டமாக இப்பகுதிகளுக்கு வரும் குரங்குகள் மாமரங்கள் மற்றும் பயன்தரு மரங்களைச் சேதப்படுத்தி விடுவதுடன் வீடுகளின் கூரைகளையும் நாசமாக்கி வருகின்றன. (35)

### பொலிசாரின் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வீதிப் போக்குவரத்து விதிகளின் அவசியத்தன்மை பற்றிப் பொலிசாரினால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (29)

### பல்கலைக்கழக மீள் பதிவுகள்

(குருநகர்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட மாணவர்களை 2002/2003 கல்வியாண்டிற்கான பதிவுகளைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வருடத்தினரை 4ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரையும், நான்காம் வருடம் 10ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரையும், இரண்டாம் வருடம் 14ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையும் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு பதிவாளரால் கேட்கப்பட்டுள்ளது. (56)

### மக்கள் வங்கி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 'ஜயஸ்ரீ 3' சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசு வழங்கும் வைபவம் 5ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

யாழ்.கன்னாதிட்டி மக்கள் வங்கி காரியாலயத்தில் நடைபெறும் இவ் வைபவத்தில் 2002ஆம் ஆண்டின் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களின் சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 37 பேருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளதென மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### மண்கும்பானில் ப.நோ.கூ.ச. கிளை

(மண்கும்பான்)

மண்கும்பானில் மீண்டும் பழைய ப.நோ.கூ.ச. கிளை இயங்கத் தொடங்கியுள்ளது. சுமார் 13 வருடங்களாக பல்வேறு இடங்களில் இயங்கி வந்த மண்கும்பான் ப.நோ.கூ. சங்கக் கிளை 1997ம் ஆண்டில் இருந்து வேலணைப் பகுதியில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (53)

# உலகவலம்

# அமெரிக்க காங்கிரஸ் ஈராக் போரில் உறுதி!

ஈராக்குக்கு எதிராக இராணுவத் தாக்குதலை ஆரம்பிப்பதற்கான அமெரிக்காவின் இராணுவத் தாக்குதல் தீர்மானத்துக்கு அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகளிடமிருந்து ஆதரவு கிடைத்துள்ளமை அமெரிக்க ஜனாதிபதிக்கு இப்போதைக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகவுள்ளது.



காங்கிரஸ் தலைவர்களுடன் புஷ்

...ரிக்க ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்க காங்கிரஸ் மிக உறுதியான ஆதரவுக்குரல் எழுப்பியுள்ளது. ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு எதிரான அமெ

இந்தத் தீர்மானத்துக்கு இன்னமும் அமெரிக்க செனட் சபையிடமிருந்து முறைப்படியான ஆதரவு தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அமெரிக்க குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த ஏகோபித்த உறுப்பினர் ஆதரவு அமெரிக்க ஜனாதிபதிக்குக் கிடைத்தமையை அடுத்து அமெரிக்க செனட் இயல்பாகவே ஆதரவு தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் எந்தத் தீர்மானமும் இன்றி ஈராக் மீது போர் தொடுப்பதற்கு இந்தத் தீர்மானம்மூலம் அமெரிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைக்கிறது.

இதேவேளை, பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 'உரைநல்கும் விருந்தினராக' பிரிட்டனின் பிளாக்பூல் (Black Pool) மாநாட்டு மண்டபத்துக்குச் சென்றிருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன், சர்வதேச சமூகத்திடம் ஈராக்கு எதிரான அமெரிக்க நிலைப்பாட்டை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.



தனது இராணுவத் தளபதிகளுடன் சதாம்

## வறுமைநோய், சுரண்டலுக்கு எதிராக ஐ.நாவுக்கு தோல்வி!

(நியூயோர்க்)

வறுமை, நோய், சுரண்டல் ஆகியவற்றுக்கு எதிரான இலக்குகளை அடைவதில் ஐ.நா. தோல்வியைத் தழுவியுள்ளது என்று கூறியுள்ளார் செயலாளர் கோபி அனான்.

இன்னமும் உலகின் சனத்தொகையின் அரைவாசிப் பேர் ஒரு வேளை உணவுடனேயே சீவிக்கின்றனர் என்ற உண்மை எம்மையெல்லாம் ஆழமாகத் தைக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## இஸ்ரேலிய ஏவுகணை தளங்கள் உஷார்நிலையில்

(டெல்அவிவ்)

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கான சாத்தியக்கூறு அதிகரித்துவருவதனால் இஸ்ரேலிய அரசாங்கம் தனது சுய பாதுகாப்பு நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

ஈராக் தன்மீது பதில் தாக்குதலை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கும் இஸ்ரேல் தனது ஏவுகணைத் தளங்கள் உட்பட அனைத்துப் பாதுகாப்புக் கட்டமைப்புக்களையும் உஷார்நிலையில் வைத்துள்ளது.

அமெரிக்க உத்தரவை அடுத்து அரபாத் மீதான முற்றுகையைத் தணித்து இந்தத் திசையில் தனது கவனத்தை இஸ்ரேல் செலுத்தத் தொடங்கியுள்ளது.

## ஜேர்மனியின் இராணுவம் ஈராக் போரில் குதிக்காது!

### பிரான்ஸின் நிலைப்பாட்டை ஜேர்மனி பலப்படுத்துகிறது

(பாரிஸ்)

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ள முனைந்து நிற்கும் இராணுவத் தாக்குதலை ஆதரித்து, அமெரிக்காவுக்கு எவ்வித இராணுவ மற்றும் தள உதவிகள் எதனையும் வழங்குவதில்லை என்று பிரான்ஸுடன் இணைந்து ஜேர்மனியும் அறிவித்துள்ளது.

ஜேர்மனியின் அதிபர் கேர்ஹாட் சிறோயிடர், ஈராக்குக்கு எதிரான போரில் ஜேர்மனி தனது நாட்டுத் துருப்புக்களை ஈடுபடுத்தப் போவதில்லை, அத்துடன் எவ்வகையிலும் அப்போரில் ஜேர்மனி பங்குபற்றாது என்று உறுதிபடத் தெரிவித்தார். இவ்விடயத்தை அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சேர்த்திருந்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஜேக்ஸ் சிராக்கும், ஜேர்மனியின் அதிபரும் பாரிஸ் நகரில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தனர். இப்பேச்சுவார்த்தைகளில் ஈராக் விவகாரம், ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலம் என்பன பற்றிப் பேசப்பட்டது. ஜேர்மனியின் தேர்தலுக்குப் பின்னர் ஜேர்மனியின் தலைவர் மேற்கொண்ட ஒரு முக்கிய சந்திப்பாக இது கருதப்படுகிறது.

எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா முயற்சிக்குமானால் பிரான்ஸ் அதற்கு எதிராக தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பிரயோகிக்கும் என்று சிராக் தெரிவித்தார். ஆனால் ஐ.நா. ஆயுதப் பரிசோதனை நடவடிக்கையில் ஈராக் எவ்வித முட்டுக்கட்டைகளையும் போடக்கூடாது என்று அவர் ஈராக் அரசிடம் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு விடயத்திலும் பிரான்ஸும், ஜேர்மனியும் ஒரே கருத்தைக் கொண்டிருக்காவிட்டாலும், ஈராக்கிய நிலைமை தொடர்பாக ஒரே கருத்தையே கொண்டிருக்கின்றன என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஈராக்குடன் ஐ.நா. பிரதிநிதிகள் தொடர்ந்து மேற்கொள்ளும் பேச்சுக்களினால் என்ன விளைவுகள் ஏற்படப் போகின்றன என்று ஜேர்மனி எச்சரிக்கையுடன் அவதானித்த வண்ணம் உள்ளது என்று பேர்லின் நகரில் ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

## அமெரிக்கா - வடகொரியா ஏவுகணை தொடர்பாக பேச்சு

(வொஷிங்ரன்)

அமெரிக்க விசேட பிரதிநிதி ஜேம்ஸ் கெலி உயர்மட்டப் பேச்சுக்களைத் தொடங்குவதற்காக வடகொரியாவுக்குச் சென்றுள்ளார். ஏவுகணை உற்பத்தி, பேரழிவு ஆயுதங்களை வைத்திருத்தல், மரபுவழி படைக்கட்டுப்பாடுகள் என்பன தொடர்பில் வடகொரியாவின் நிலைப்பாடுகள் குறித்தே இப்பேச்சுக்கள் அமையவுள்ளன.

கிழக்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜங்கச் செயலாளர் ஜேம்ஸ் கெலியின் தலைமையில் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட இத்தூதுக்குழு நேற்றுக்காலை அமெரிக்காவிலிருந்து புறப்பட்டது. சனிக்கிழமை வரை தங்கியிருந்து தீவிரமான பேச்சுக்களில் அவர்கள் ஈடுபடுவர். பில்கிளின்ரனின் நிர்வாகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மடலின் ஒல்பிறைற் அம்மையார் மேற்கொண்டிருந்த விஜயத்தின் பின் ஜேம்ஸ்கெலியின் விஜயம் இடம் பெறுகிறது.

அமெரிக்க - ஈராக் போருக்கான போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், அமெரிக்காவினால் 'தீமையின் அச்சு நாடு'களுள் ஒன்றாக விபரிக்கப்பட்ட வடகொரியாவுக்கு அமெரிக்க பிரதிநிதி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச நீதிமன்ற விவகாரம்

## அமெ. ஐரோப்பிய நாடுகளுக்குள் உச்சமடையும் முரண்பாடுகள்

சர்வதேச நீதிமன்றத்தின் சட்ட முறிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று, ஆரம்பம்முதல் அது தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட மறுக்கும் அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்குமிடையில் இவ்விடயம் தொடர்பாகக் கடுமையான கருத்து மோதல்கள் தோன்றியுள்ளன.



ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றம்

சர்வதேச ரீதியான இராணுவ நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டிவரும அமெரிக்காவுக்கு போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படக்கூடிய அமெரிக்க இராணுவச் சிப்பாய்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்துவதில் விருப்பமின்மை நிலவுகின்றது.

இவ்விடயம் அமெரிக்க இராணுவத்தினர் மத்தியில் இராணுவ ரீதியான ஓர்மத்தைக் குறைத்துவிடுமென்பதுடன் வேறு பல நடைமுறைச் சிக்கல்களும் கொண்டதாக அமெரிக்கா கருதுகிறது. இவ்விடயத்தில் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு ஐரோப்பிய நாடுகளுக்கு அதிருப்தியைக் கொடுக்கிறது.

### தேர்தல் கள வன்முறைகள்:

## ஜம்மு-காஷ்மீர் தாக்குதல்களில் 10 பேர் பலி; 21 பேர் காயம்!

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரில் கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த இரு வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 5 இந்தியப் படையினர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதுடன், 21 பேர் காயமடைந்துள்ளனர்.

தீவிரவாதிகளால் பேருந்தில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் பேருந்து தீப்பற்றி எரிந்தது. இச்சம்பவத்தில் 2 போ பலியாகினர், 21 பேர் காயமடைந்தனர் இவர்களில் சிலரது நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த படையினரை இலக்காக வைத்துத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட மற்றொரு குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் இந்தியப் படையினர் உட்பட 8பேர் பலியாகியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அங்கு நிகழ்ந்த மாநில சட்ட சபைத் தேர்தலை முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் எதிர்த்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



காஷ்மீரின் போர்க்களம்

# ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமனே

உலகில் வாழும் உயிரினங்கள் பற்பல. இவை அனைத்திலும் உயர்வான பிறப்பாக, உயர்திணையாகக் கொள்ளப்படும் பெருமைக்குரிய பிறவி மனிதப்பிறவி.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் கூறியுள்ளார்.

பெண்ணுக்கு முதன்மை தந்து சக்தியாகவும் தாயாகவும் போற்றுகின்றது தமிழ்ச் சமூகம். ஆனால் அதே பெண் இனத்தை பண்டுனா முதல் இன்றைய நாள் வரை அடிமைகளாக, சமத்துவமற்றவர்களாக நடத்தி வருகின்றது. இந்த இழி நிலை கண்டு உள்ளம் கொதித்து அறை கூவல் விடுத்தான் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தமிழ் கவிஞன் பாரதி.

இவ்வுலகில் அன்று தொடக்கம் இன்றுவரை நிலவிவரும் அடக்குமுறைகளில் பெண்ணடிமையும் ஒன்று. இதிலிருந்து விடுபட உலகின் பல நாடுகளிலும் பெண்கள் போர்க்கொடி ஏற்றி போராடித் தமது சமத்துவ உரிமைகளைப் பெற்றமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வரலாற்று முக்கிய நிகழ்ச்சிகளாகப் பேணப்படுகின்றது.

பொருளாதார விஞ்ஞானத் துறைகளில் மிக்க வளர்ச்சி கண்ட சில நாடுகளில் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமனாக வாழும் நிலை காணப்படினும், அங்கும் வெளிச்சத்துக்கு வராத அடக்குமுறைகள் இருக்கவே செய்கின்றன என்பதனை பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.

பெண்ணிற்குக் குடும்பத்திலும் சமூகத்திலும் பாரம்பரிய பொறுப்பும், பங்களிப்பும் உண்டு. இதனை உணர்த்துவதுபோல் இந்து சமய தத்துவமே அர்த்தநாரீஸ்வரராக இறைவனைக் காண்கின்றது. உலகம் ஆண்பாதி பெண்பாதி என எடுத்தியம்புகின்றது.

எழுத்திலும், பேச்சிலும் வார்த்தைக்கு வார்த்தை சமத்துவம் பேணப்படுகின்றபோதிலும் நடைமுறையில் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் என்பது இன்றும் கேள்விக்குறியாக நிற்கின்றது. இதற்குக் காரணம் பெண்களின் இயற்கை உடலியற் கூற்று வேறுபாடா? மெல்லியலாரின் மென்மையான உள்ளமா? பொறுமை என்னும் அணிகலனா? அல்லது ஆண் ஆதிக்க சமுதாயத்தில் ஆணவமும் அலட்சியமுமோ? எதுவாக இருப்பினும் சமத்துவமின்மை ஏற்புடைய கருத்தன்று. ஆகவே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழ்தலே ஏற்புடைய கருத்தாகும்.

இன்று ஜனநாயக அரசியல் எழுச்சியும், அனைவருக்கும் கல்வி என்னும் விழிப்புணர்வும் பெண்களின் சமூக நிலையினை ஓரளவு உயர்த்தி உள்ளது. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற நிலைக்குக் கொண்டுவந்து அரசியல், மருத்துவம், பொறியியல், சட்டம், பாதுகாப்புத்துறை, விண்வெளி ஆய்வு போன்ற சகல துறைகளிலும் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமனாக வாழும் நிலையினை ஏற்படுத்தி உள்ளது. இன்றைய பொருளாதார நிலையில் சகலரும் உழைத்து வாழ வேண்டிய நிலையில், ஆண்களுடன் பெண்களும் சகல துறைகளிலும் சமத்துவமாகத் தொழில் புரிய வேண்டும் என்ற நிலை ஏற்படுத்தியுள்ளது.

இல்லத் தலைவியாகவும் ஆண்களின் உள்ளத் தலைவியாகவும் இருந்த பெண் இன்று நாட்டின் தலைவியாகி உலகத்தின் முதல்வியாகி ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமனாக வாழ்கின்றனர்.

"வாழ்க பெண்மை"
"வளர்க சமத்துவம்"

பா. கலைவாணி
ஆண்டு - 10
வல்வை சிவகுரு வித்தியாலயம்.



## நீங்களும் செய்து பாருங்கள்

### மில்க் மெயிட் பழ சர்பத்



தேவையான பொருட்களும் அளவுகளும்.

மில்க்மெயிட் இனிப்பூட்டப்பட்ட கட்டிப்பால் - 1 ரின்.
தேசிக்காய்ச்சாறு - 2 மேசைக்கரண்டி.
உருக்கிய பட்டர் - 2 மேசைக்கரண்டி.
நீங்கள் விரும்பிய பழம்
முட்டை - 2 வெண்கரு

செய்முறை:

மில்க்மெயிட் பால், தேசிக்காய், பட்டர் என்பவற்றை கலந்து சுத்தப்படுத்திய பழத்தையும் சேர்த்து ஒரு கோப்பையில் இட்டு குளிர விடவும். முட்டை வெள்ளை கருவை நன்றாக அடித்து குளிர வைத்த கலவையுடன் கலந்து உறை தட்டில் ஊற்றி (refrigerator tray) அரைவாசி உறையவிட்டு தட்டிலிருந்து அகற்றி நன்றாக அடித்து குளிருட்டியில் வைத்து குளிர வைத்து பரிமாறுங்கள்.

பொருத்தமான பழங்கள்: பப்பாசி, அன்னாசி, பட்டர்பழம், மாம்பழம், விளாம்பழம்.

### நண்டு கட்லெட்

தேவையான பொருட்கள்:-



நண்டு - 04
உருளைக்கிழங்கு - அரைக்கிலோ
பச்சை மிளகாய் - 05
பெரிய வெங்காயம் - 03
மிளகுப் பவுடர் - 01 தேக்கரண்டி
முட்டையின் வெள்ளைக்கரு - 03
ரொட்டித்தூள் -2 கப் (ரஸ்க்தூள்)
எண்ணெய் - அரை லீற்றர்
உப்பு - சிறிதளவு

செய்முறை :-

முதலில் நண்டின் சதை பகுதியை ஆவியில் வேகவைத்து எடுத்து புட்டு போல் பிசைந்து வைக்க வேண்டும். கிழங்கை வேக வைத்து எடுத்து தோல் நீக்கி பிசைந்து நண்டு புட்டோடு கலந்து வைக்க வேண்டும். வெங்காயம், பச்சைமிளகாயைப் பொடியாக நறுக்கி உப்பு சேர்த்து கிழங்கில் கொட்டி பிசைந்து கொள்ள வேண்டும். காரம் வேண்டும் என்றால் மிளகுத் தூளையும் போட்டுப் பிசைந்து சிறுசிறு அளவாக உருண்டைகளாக உருட்டி வைக்க வேண்டும். முட்டையின் வெள்ளைக்கருவை நுரைவரும் வரை நன்றாக அடித்து உருண்டைகளை ஒவ்வொன்றாக முட்டை கருவில் போட்டு எடுத்து ரொட்டித் தூளில் (ரஸ்க் தூள்) புரட்டி எடுத்து நன்றாக சூடேறிய எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும்.

இதுவே சுவையான நண்டு கட்லெட். விசேஷ பண்டிகை நாட்களில் விருந்தினருக்கு செய்து கொடுத்து மகிழ்ச்சியூட்டலாம்.

# அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி!,

ஐந்து ஆண்டுகளின் பின் உன் கடிதம் கிடைத்தபோது உன்னை நேரே சந்தித்த சந்தோஷம் மனதினுள் பொங்கியது. என் எண்ணப்போக்குகளைப் புரிந்து கொள்ளக்கூடிய சிந்தியுடன் கடிதத்திலாவது தொடர்பு கொள்ள மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதே.

உண்மைதான். நான் எனது கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஐந்து பேர் சேர்ந்து ஒரு காதல் பாட்டு பாடத் தொடங்கினால் என் கருத்துக்கள் வெளியே கேட்காது போய்விடும்.

உனக்கு நினைவிருக்கிறதா இராசமலரை? எங்களிருவருடனும் எட்டாம் வகுப்பு முதல் சேர்ந்து கல்வி கற்றவள். எங்கள் கலை இலக்கிய கழகச் செயலாளராக இருந்தவள். விவாதம், கருத்தரங்கு என்ற எல்லாவற்றிலுமே பங்குகொள்வாள். மூன்று மாதங்களுக்கு முன் அவளைச் சந்தித்தேன். நீண்ட நேரமாக உரையாடினோம்.

அன்றுமுதல் எனக்கொரு சந்தேகம். நாம் எங்கள் கருத்துக் களை ஓரிரு மனங்களில் கூடப் பதிக்கமுடியவில்லையோ? சிறு வயது முதல் உரையாடி பதிக்க முயன்ற கருத்துக்கள்கூட, சம வயதினர் பலர் சேரும்போதோ, பணிமனையில் சேர்ந்து பணியாற்றுவோராலோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படும் மனத்தாக்கத்தினாலோ வேறுபட்டுப் போகின்றது என்று கருதவேண்டியிருக்கிறது.

இராசமலரின் மகள், மூன்று பெண்பிள்ளைகளை இராசமலர் பெற்றது தவறென்று கூறுகிறாளாம். ஒரு பெண்ணுக்குக்கூட சீதனம் கொடுக்க முடியாத பெற்றோர் பெண்களைப் பெறும்போது சிந்தித்திருக்க வேண்டுமென்கிறாளாம். இத்தனைக்கும் மூன்று பெண்களையும் படிக்க வைத்து மூவரும் தாமே உழைத்து வாழக்கூடிய அளவிற்கு வேலையும் தேடிக் கொடுத்த பின் அவர்கள் இப்படிக் கூறினால், பெண் பிறந்ததும் அந்தப் பிள்ளையைக் கொல்லச் சொல்கிறார்களா? அல்லது பெற்றோர் எங்காவது போய் கொள்ளையடித்திருக்க வேண்டுமென்கிறார்களா?

சிந்தி, இராசமலர் எவ்வளவு கவலைப்பட்டாள் தெரியுமா? தன் பெண் தன் காலில் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ வழி செய் வதைவிட, அதிகமாக அவளுக்காகவே பொருள் சேர்க்க வேண்டிய ஒருநிலை எம்மிடையேதான் இருக்கிறது. இதை மாற்ற என்ன செய்ய வேண்டும்?

இராசமலரும் நானும் நீயும் நமக்குள் புலம்புவதிலோ, நான்கு பேரிடம் மட்டும் எம் கருத்துக்களைக் கூறுவதிலோ பயனில்லையென்றே எனக்குத் தோன்றுகிறது. இராசமலருடன் உரையாடிய பின்தான் எனக்கு இந்த எண்ணம் ஏற்பட்டது.

எனவே நாங்கள் நானூறு பேருக்காவது எமது கருத்துக்களைக் கூறவேண்டும். அதில் நாற்பது பேராவது இக்கருத்துக்களை ஏற்றுக்கொள்வார்கள். நடைமுறைப்படுத்த முனைவார்கள். அந்த நாற்பது பேரின் கருத்துக்கள் மேலும் பரவ வாய்ப்புக்கள் ஏற்படுமல்லவா?

ஒரு விடயம், இந்த நானூறு பேரும் பெண்களாக மட்டும் இருக்க வேண்டுமென்று நான் கருதவில்லை. பெண்களைப் பாதிக்கும் விடயங்கள் ஆண்களைப் பாதிப்பதில்லை என்று கூறமுடியாது. உதார ணத்திற்கு ஓரிரண்டை எடுத்துக்கொள்வோமே.

சீதனம் என்பதை எடுத்துக்கொண்டால் மூன்று பெண்களுக்கு ஒரே ஓர் அண்ணனாக ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன் படும்பாடு சொல்லிமாளாது. தன்னை ஒறுத்து, வாழ்க்கையில் எதையுமே அனுப விக்காது, உழைத்தவற்றையும் சீதனமாகக் கொடுத்து, தனக்குக் கிடைத்த சீதனத்தையும் தங்கைக்குத் தாரைவார்த்துவிட்டு அப்பாடா என்று நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதில் திருமணம் செய்து கொண்ட பின் பத்தாம் மாதமே ஒரு பெண் பிறந்தால் அவனது வாழ் க்கை எப்படி இருக்கும்?

பாலியல் வல்லுறவை எடுத்துக்கொள்வோம். பாதிக்கப்பட்ட பெண்ணின் காதலனாகவோ, கணவனாகவோ இருந்தால் அவனை உதறி எறிந்துவிடலாம். தந்தையாகவோ, சகோதரனாகவோ இருந்தால் அவனுக்கும் அதனால் வேதனைதானே?

எனவே சிந்திக்க வேண்டியதும் சீர்திருத்த வேண்டியதும் அனைவருந்தான் என்பதை முதலிலே புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். நாம் பெண்களுக்காக ஆணுக்கெதிராகப் போர்க்கொடி தூக்குகிறோமென்று ஆண்களும், தேவையற்ற விடயங்களை அல்லது திருத்த முடியாத விடயங்களை அல்லது நாம் கற்பனை செய்யும் விடயங்களைப் பற்றிக் கதைக்கிறோமென்று பெண்களும் நினைக்காமல் நாம் கூறுபவற்றைக் கேட்டு, சிந்தித்து, கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றால் நம் சமுதாயம் நலம்பெறும்.

எதற்கும் நம் முயற்சியைத் தொடர்வோம்.

அன்புடன்,
யோசி.

## எண்ணத்து வடிவங்கள்

# பொங்கட்டும் பெண் விடுதலை



ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளப்பில்லைக் காணென்று கும்மியடி.

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.

காதலனொருவனைக் கைப்பிடித்தே; அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

● பாரதி



# தாய்

தாயானவள் தங்கத்திலும்
தரம் கூடியவள்
துணை மறந்து
உனைச் சுமந்தவள்
அது அவள் மறுபிறப்பென
தெரிந்தும் - மனம்
வருந்தாது - உனக்காகக்
காத்திருந்தவள்!
மழலையாய் நீ தவழ
மார்பினில் பாலூட்டி
இரத்தத்தைப் பாலாக்கி
இரவுகளைப் பகலாக்கி
உனைக்கரை சேர்க்கும் வரை
உயர வளர்த்தவள் - அவள்
இவளின் மகிமையை - நீ
உணர வேண்டுமானால்
நீயும் தாயாகிப் பார் அதன் சுகமும்
சுமையும் உனக்குத் தெரியும்!!!

தர்மினி பத்மநாதன் ●

# தேவை



வாகனங்களிற்கு இலக்கத் தகடுகள்
தேவை தான் - அவை
மிதி வண்டிக்கும் தேவை
ஏனெனில் ... இன்று
வீதிதோறும் அலையும்
கட்டாக்காலிகளை
அடையாளப் படுத்துவதற்காக

# ஆரோக்கியமான மருத்துவமனையாக வீட்டையும் மாற்றலாம்!

வீட்டில் தாதியம் என்பது விஞ்ஞான ரீதியில் உளநிலைக்கேற்ப பராமரித்தலாகும். சிறந்த தாதியம் சீக்கிரமே பூரணமாக குணமடைய உதவும். நோயாளியையும் அவரின் தேவைகளையும், குண இயல்புகளுக்கும், நோயின் அகோரத்திற்கும் ஏற்ப, ஏற்றவாறு நடத்தல் வேண்டும். உற்சாகமாகவும் பொறுமையுடனும் நடந்து கொள்ளல் அவசியம். வயது வந்தவர்களை பராமரிப்பது ஒரு சுமையாகவோ அல்லது எடுத்துக் கொள்ளக்கூடாது.

உச்சியிலிருந்து பாதம்வரை ஒழுங்காக உடலக, உடற்புக அவயவங்களை தனித்தனியே அவதானிக்க வேண்டும். உச்சியில் போதிய எண்ணை வைக்க வேண்டும்.பேன், சொடுகு போன்ற பிற பொருள்களை அகற்ற வேண்டும்.

வாய், பல், வியாதி ஏற்பட்டால் பற்களில் அதன் சுற்றாடலில் நோ வீக்கம் இருக்கும். வாயிலும் நோ, வீக்கம் ஏற்படும். வைத்திய உதவி மிக அவசியம். சாப்பாட்டிற்கு பின் பற்தூரிகையினால் மேல் தாடையை மேலிருந்து கீழும்

கீழ்த்தாடையைக் கீழிருந்து மேலும் துலக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துங்கள். இடை நேரங்களில் இனிப்புப் பொருட்கள், பானங்கள் உட்கொள்வதை முற்றாக அறவே தவிர்க்க வேண்டுங்கள். மரக்கறி வகைகள் பழ வகைகள் பற்களுக்கு நன்று. இடையிடையே பல்நிபுணரிடம் ஆலோசனைகளை பெற வேண்டுமெனவும் நாக்கு வழித்தல் முக்கியமாகும் என செய்வியுங்கள்.

**நீங்கள் இல்லத்தலைவி மட்டுமல்ல வீட்டின் மருத்துவதாதியும் ஆகலாம்**

கால், கை நகங்களை குளித்த பின் நன்றாக ஒட்ட வெட்டி விடுங் கள். தினமும் குளிப்பது நன்று. மிகவும் இயலாதவராக இருந்தால் குளிக்கவார்ப்பதற்கு சூடான தாங்கக்கூடிய நீரைப் பயன்படுத்துங்கள். அல்லது துவாயால் மேல் முழுக்க ஒத்தி எடுங்கள்.

ஏற்ற உணவு வகை, பானங்கள் குடிக்க கொடுக்க வேண்டும்,வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை குடிக்கக் கொடுங்கள். வெளிச்சம், காற்று படுக்கைச் சுத்தம் போன்றவற்றை கவனியுங்கள்.

நோயாளி உளரீதியாக பாதிப்படையாது இருக்க பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகங்கள் கொடுங்கள். தைரியப்படுத்தி உற்சாகம் ஊட்டும்வகையில் கதையுங்கள். போதிய ஓய்வு, நித்திரையும் அவசியம் என்பதை கவனியுங்கள். நீங்கள் அவதானித்த குறிப்புகளை வைத்தியரிடம் கூறுங்கள்.

தொற்றுநோய் ஏற்பட்டால் அவரை தனிமைப்படுத்துங்கள். அவரை கையாள முன்னும் பின்னும் சவர்க்காரம் கொண்டு கைகளை கழுவுங்கள். உடற்பயிற்சி அல்லது யோகாசனம் மிக அவசியம். போதிய ஓய்வு எடுக்கச் செய்யுங்கள். தொடர்ந்து படுக்கையில் இருப்பவராயின் படுக்கைப்புண் ஏற்படாமல் தடுப்பது மிக முக்கியம். ஒரே மாதிரி படுக்காமல் மாறிமாறிப் படுக்க வையுங்கள். படுக்கையில் மலம், சலம் தாமாகவே கழிப்பவராயின் மெழுகுசீலையை பெற்சீற்றின் மேல் விரியுங்கள். பெற்சீற்றையும் மாற்றிக் கொள்ளுங்கள். சலரோகம் உள்ளவராயின் பாதங்களை கவனமாக பாதுகாக்கும்படி அறிவுறுத்துங்கள். புண் வந்தால் மாறாது. தன்னறிவு தவறியவராயின் நினைவு மீள் நிலையில் படுக்க வையுங்கள். காற்றுப்பாதை (Airway) திறந்திருப்பதை உறுதி செய்யுங்கள்.

# சிகையலங்காரக் குறிப்புக்கள்



**Pony tail:-** போனிரெயில் (Pony tail) என்பது தலையைச் சீராக வாரியெடுத்து ஓர் நாடாவினால் இறுக்கமாகக் கட்டிக் கொள்வதாகும்.

**Back Comb:-** பக்கோம் (Back comb) செய்வதென்பது, தலை முடியின் தேவையான முன்பகுதி மயிரை சீராக வாரியெடுத்து அப்பகுதிகளின் உட்புறப் பகுதியைச் சீப்பால் மேலிருந்து கீழ்நோக்கி வாரித் தலை முடியைச் சுருக்கிக்கொள்வதாகும். இவ்வாறு செய்வதால் முக அமைப்புக்குத் தக்கவாறு சிகையலங்காரத்தை உயர்த்திக் காண்பிப்பதோடு சிகையலங்காரம் நீண்ட நேரத்திற்கு கலைந்து போகாமல் இருக்கும்.

**Pad:-** பாட் (Pad) என்பது உதிர்ந்த தலைமுடிகளை சேகரித்தெடுத்து அவற்றை கேயாநெற் (Hair Net) இனுள் தேவையான அளவிற்குப் போட்டு (Hair Net) யை நிரப்பி விரும்பிய வடிவமாக்கிக் கொண்ட பின் (Hair Net) இன் வாய்ப் பகுதியை தைத்துக் கொள்வதாகும்.

**Curl:-** கேள் (Curl) செய்வதென்பது தலைமுடியை சீராக வாரியெடுத்து, சிறு பகுதிகளாக பிரித்தெடுத்து, அவற்றின் கீழ் வழமாகவோ அல்லது மேல் வழமாகவோ இரண்டு அல்லது மூன்று விரல்களை தலைமுடியில் ஒரு முறை சுற்றிக் கொண்ட பின்பு முன்னைய விரல்களை நீக்கிக் கொண்டு, இரண்டு கைகளின் ஆட்காட்டி விரல்களைக் கொண்டு சுற்றிக் கொள்வதாகும்.

**Roll:-** றோல் (Roll) செய்வதென்பது தலைமுடியை சீராகவாரியெடுத்து விரலில் சுற்றிக் கொண்டபின், பின்வழமாக உருட்டிச் சுற்றிக் கொள்வதாகும்.

**Tuck:-** ரக் (Tuck) செய்வதென்பது, தலைமுடியை உட்புறமாக Back Comp செய்து சிறிதளவாக முன்புறமாக தள்ளி வைத்துக் குற்றிக் கொள்வதாகும்.

### சிகையலங்காரம் நீண்டநேரம் கலையாமல் இருக்க சில வழிமுறைகள்

☐ தலைமுடியை Pony tail கட்டும்போது எலாஸ்ரிக் துண்டால் கட்டிக்கொண்டால் நீண்ட நேரம் சிகையலங்காரம் கலையாமல் இருக்கும்.

☐ சிகையலங்காரம் செய்யும்போது, கேயா ஜெலி (Hair Jell) அல்லது கேயாஸ் பிறே (Hair Spray) பாவித்துக் கொண்டால் சிகையலங்காரம் நீண்டநேரம் கலையாமல் இருக்கும். Hair Jell பூசும்போது தலைமுடியைச் சீராக வாரிக்கொண்ட பின் தலைமுடியின் வெளிப்புறம் பூசிக்கொள்ள வேண்டும்.

**Hair Spray:-** கேயாஸ் பிறே (Hair Spray) பாவிப்பதாயின் தலைமுடியின் back comb செய்த பகுதிக்கு Spray பண்ணிக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் சிகையலங்காரம் நீண்ட நேரம் கலையாமல் இருக்கும்.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
*ஒரு மனித சமூகத்தினுடைய கண்ணீரிலிருந்து இன்னொரு மனித சமுகத்தினுடைய உரிமைகள் உருவாக முடியாது*
-பன் குரவ்ற்

# நமது நோக்கு

## பாலைநிலத்தில் துளி நீராய்....

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் ஏற்பட்ட சில ஒப்பந்த மீறல்களில் பெரும்பான்மையானவை கடற்படையினரோடு தொடர்புபட்டவையாகவே இருந்து வருகின்றன.

இவைதான் எல்லைகள் என்று வரையறுக்க முடியாத நிலை கடலில் நிலவுவதுதான் இந்த மீறல்களுக்குத் தனியான காரணம் என்று கூறமுடியாது. அதற்கப்பாலும் கடற்படையினர் ஒப்பந்தத்தை சரிவரப் பின்பற்றாமையும் கடலில் சர்ச்சைகளுக்குக் காரணமாக இருந்துள்ளது!

தனியே விடுதலைப் புலிகளோடு மட்டுமே இத்தகைய முரண்பாடுகளைக் கடற்படை ஏற்படுத்திக் கொண்டது என்று மட்டும் கூறமுடியாது. கடற்றொழிலை நம்பியே தமது அன்றாட சீவியத்தை நடாத்திவரும் அப்பாவி மீனவர்கள் கடலில் வைத்துத் தாக்கப்படுவது இன்று அடிக்கடி நிகழும் சம்பவமாக மாறிவருகின்றது. குறிப்பாக வடமராட்சி கடற்பரப்பில் இத்தகைய பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இவ்வாறான நிலையில் கடலில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களையும், மீன்பிடித்தடைகளையும் அமல்படுத்திக் கொண்டு மக்களிடையே சுமுக வாழ்வைத் தோற்றுவித்து விடலாம் எனக் கருதினால் அது யதார்த்தத்துக்கு புறம்பானதாகவே இருக்கும்.

இதையேதான் மீன்பிடித் துறைப் பிரதி அமைச்சரான மொஹிதின் அப்துல் காதரும் தனது கருத்தாகக் கூறியுள்ளார். படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே சந்தேகங்கள் அகன்று உள்ள நிலையில் கடல் வலயத் தடைகள் நீக்கப்படுவதுதான் சாலச் சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மீனவர்கள் இன்னமும் திறந்த வெளிச் சிறைகளில் வாழும் கைதிகள் போல வாழ வேண்டிய தேவையில்லை என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

அரசாங்க அமைச்சர் ஒருவர் இது போன்ற கருத்தைக் கொண்டிருக்கையில், நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த வேண்டுமானால், கடற்படையினர் தமது கெடுபிடிகளைத் தளர்த்திக் கொள்வது அவசியமானது. அதுவே கடற்பகுதிகளை சுமுகமான சூழலுக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

இதேவேளை - கடற்படை தனது பாதுகாப்பு வலயமாக அறிவித்திருந்த யாழ். குடாநாட்டின் பகுதிகள் சிலவற்றில் சற்றுத் தளர்வினை ஏற்படுத்த தயார் என நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இதன் படி - மண்டைதீவு மக்கள் மீள்குடியமர ஏற்றவகையில் முகாம் அமைத்திருந்த 50 வீடுகளில் இருந்து கடற்படையினர் விலகச் சம்மதம் தெரிவித்துள்ளதுடன், காரைநகரிலும் இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த சில வீதிகளை மக்களின் பாவனைக்குத் திறந்து விடவும் உறுதியளித்திருந்தனர்.

இந்த வாக்குறுதிகள் யாவுமே சரிவர நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் பட்சத்திலேயே இவற்றின் நம்பகத்தன்மை பற்றிக் கூறமுடியும்.

கடற்படையினர் இத்தளர்வினை நடைமுறைக்குக் கொண்டு வருவதுடன், இன்னமும் தொடர்ச்சியாக சுமுகநிலையைத் தோற்றுவிப்பதற்கான மேலதிக செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வடபிராந்திய கடற்படைத் தளபதியின் அறிவிப்பு தற்போது மக்கள் அனுபவித்துவரும் கெடுபிடிகளோடு ஒப்பிடும் போது, பாலைநிலத்தில் காணும் ஒரு சில மழைத்துளிகளாகவே உள்ளது.

எனவே, கடற்படையினருக்குச் சமாதானத்தின் மீதும், சுமுகநிலையின் மீதும் உண்மையான அக்கறை இருக்குமானால்- அதி உயர்பாதுகாப்பு வலயங்களையும், மீன்பிடித் தடைகளையும் நீக்குவதோடு, மக்கள் கடற்பகுதிகளையண்டிய தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவும் வழிசெய்து கொடுக்க வேண்டும். சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதில் கடற்படையினர் தமக்குள்ள பாரிய பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

# அக்கராயன் முதல் அநுராயன்புரம் வரை

(நேற்றைய தொடர்ச்சி)

இங்கு அநுராயன்புரத்திற்கு வருகிறோம்.

1980களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் படி அநுராயன்புரநகரம் கி.மு. 700இல்



3 அடி உயர மண் சிற்பம்

கட்டப்பட்டது. அந்தக் காலத்திலேயே விவசாயம், மந்தை மேய்ப்பு, குளக்கட்டுமானம், இரும்புப்பயன்பாடு என்பன எழுச்சிபெற்று விட்டன. இதனடிப்படையில் இலங்கையின் முதல் நகரம் அநுராயன்புரம் ஆகும்.

**தி. தவபாலன்**

அக்கராயனில் தொல்லியல் சான்றுகளுக்கு வருகின்றோம்.

அக்கராயன் ஆற்றின் ஆரம்பநிலையில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கற்கால ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டு அங்கு மூதாதை மனிதவாழ்வு உறுதிப்படுத்தப்பட்டது.

இப்போது அக்கராயன் குளமுள்ள இடத்தில் (அலைகரைப்



கற்குவை ஈமச் சின்னங்கள்

பகுதியில்) திராவிடர்களின் பெருங்கற்கால (கி.மு.0 முதல் 1000 வரையான ஆண்டுகள்) ஈமச்சின்னங்கள் ந. குணரட்ணம் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. கற்குவை என்ற வகை ஈமச்சின்னங்கள், கற்றகடு வகை ஈமச்சின்னங்கள், 3அடி உயர சுடுமண் சிற்பம், ஈமத்தாழிகளின் ஓடுகள், உலோக உருக்கு உலைகளின் பகுதிகள், சிவப்பு - கறுப்பு மட்பாண்டங்கள், செங்கற்கள் என்பன செறிவாக அக்கராயன் குளத்தில் நீர் சேர்க்கும் நிலை ஆற்றின் கரைகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை வன்னியிலுள்ள தொல்லியல் ஆர்வலர்களைத் தவிர ஏனைய தொல்லியல் ஆய்வாளர்களால் அக்கறைப்படுத்தப்படாதுள்ளன. அக்கராயன் குளத்தின் வடக்குப் பகுதியில் காட்டினுள் அக்கராயன் ஆற்றின் கிளை

**அறிவியல் விளர்ச்சி ஒரு பார்வை**

ஒன்றின் சிறிய குளத்தின் அருகே பெரியதொரு கட்டுமானம் கூட ந.குணரட்ணத்தின் சுயமுயற்சியினால், சுய பெரும் பொருட் செலவால் கண்டுபிடித்துத் துப்புரவாக்கப்பட்டது. அத்துடன் கலவலப்பு ஆற்றின் கரையில் 3000 ஆண்டுகள் முற்பட்ட சுடுமண் யானை உருவங்களும் எடுக்கப்பட்டன. தமிழர் வரலாற்றில் புதிய பக்கங்களைத் திறக்கும் புதிய கட்டுமானம் இது. இவை தவிர அக்கராயனில் ஒரு சிறு குளமான 'உரல் போட்ட மோட்டை' அணையின் கீழ் சிறிய வடிவிலான செய்நேர்த்தியற்ற சுடுமண் பெண் உருவச்சிலைகள் எடுக்கப்பட்டன. இவை போல அக்கராயன் எங்கணும் தொல்லியல் சான்றுகள் நிறைந்து கிடக்கின்றன. ஒரு சில தொல்லியல் சான்றுகள்மீது மேற்கொள்ளப்பட்ட அறிவியல் காலக்கணிப்பில் அவை கி.மு. 700ற்கு முற்பட்டவையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அக்கராயன், பூநகரியின் தொன்மைத் துறைமுகங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த புவியியல் கருத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.



அக்கராயனில் தொன்மையான சுடுமண் கட்டுமானத்தில் இருந்த மட்கலம்

இங்கு நாம் கேள்வியை முன்வைக்கின்றோம். இலங்கையின் முதல் நகரம் அநுராயன்புரம் என்ற கருத்தில் இருந்து தொல்லியலாளர்கள் விலகுவார்களா?

வன்னியின் ஆறுகளின் ஓரங்களில் மண்ணில் புதைந்து கிடக்கும் எம் மூதாதையரின் செல்வங்களை விடுவிப்பார்களா?

ஆதாரம்:-

**Pre - History of Sri lanka.**
**Dr. S. Deraniyagala, 1992 , Sri lanka.**
யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு.
சி.க.சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழகம் 1993
**Explorer of ancient times.**
**Susanne Loos Jaya wickreme,**
**Sunday times, 2001.12.30**
**Looking for the Link.**
**Dr. S. Deraniyagala,**
**Sunday times, 1997.11.30**
**Encyclopedia Brittanicca, 1993**
**(Agriculture history)**

# சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிக்கு ஐம்பது மாணவர்கள் தெரிவு !

(குருநகர்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2002/2003 கல்வியாண்டிற்கான சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கு 2001ம் ஆண்டு க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மேற்படி கற்கை நெறிக்கு அனுமதிக்கும்முகமாக நடைபெற்ற பரீட்சையிலும், நேர்முகத்தேர்விலும் தோற்றிய 50 மாணவர்கள் மேற்படி கற்கை நெறிக்கு அனுமதி பெற்றுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

ஆ.அரவிந்தன், சி.அருள்குமரன், ச.சந்திரமோகன், வி.சித்திரா, ச.ஞானவேல், இ.ஜெனார்த்தனன், க.ஜெயந்தன், இ.கஜேந்திரன், வி.சாந்தரூபன், கு.குகதாசன், து.குமாரநாதன், ந.மகேஸ்வரன், அ.மதன்ராஜ், த.மதியழகன், தி.மயூரன், தி.முத்துக்குமார், இ.நிகிந்தன், இ.நிரஞ்சன், த.பகீரதன், செ.பன்னீர்செல்வம், ச.பத்மஜெயன், து.பிரபுதாஸ், தி.பிரசாத், இ.ரமணன், ந.ரமணன், ச.ரமணன், கி.ரமணராஜ், த.ரமேஸ், வ.சாந்தரூபவன்,வே.சர்வேந்திரன்,சி.சத்தியசங்கரன், இ.சாமினி, ம.சத்தியகீர்த்தி, ந.சிவகுமார், சி. சிவானந்தராஜா, ச.சிவதர்ஷனி, சி.சிவதீஸ், க.சிவாஜினி,கு.சிறி கிருஸ்ணசாந்தி, த.சுலக்ஸன், ம.தயாமதி, ச.தயாபரன்,அ.தேவசுதன் இ.திருச்செல்வம், த.திவாகர், சி.உமாசாந்தன், சோ.விஜிந்தன், பி.விவாஸ்கரன், சி.சுகிந்தா, ம.சசிகலா

ஆகியோர் மேற்படி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களாவார்.

(36)

# நீர்வாழ் விலங்குகளை காக்க ஊர்காவற்துறையில் அலுவலகம்!

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர்வாழ் விலங்குகள் அபிவிருத்தி நிறுவகத்தின் சேவை யாழ். மாவட்டத்துக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இம்முயற்சியில் முதற்கட்டமாக மேற்படி நிறுவகதின் கிளை அலுவலகம் ஒன்றை ஊர்காவற்துறையில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடபகுதி கடற்பிராந்தியத்தில் தொழில்சார் ஆய்வு மற்றும் தொழில் பயிற்சி நடவடிக்கைகளை இந்த நிறுவகம் மேற்கொள்ள இருக்கின்றது. இவ்வாறான முயற்சிகளின்போது யாழ். பல்கலைக்கழகம், கடற்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

(க)

# வளங்கள் பற்றாக்குறையானாலும் சீர் போக்குவரவுக்கு முழு முயற்சி செய்கிறோம்!

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளராகச் சேவைபுரிந்துவரும் எஸ்.மணிவாசகன் ஓர் ஆன்மீகவாதியும்கூட. கடமையில் கண்டிப்பும் அதேவேளை கனிவும் கொண்டவர் என சக உத்தியோகத்தர் , ஊழியர்களால் விமர்சிக்கப்படுபவர். மேலதிகாரிகள் தலைமையகத்திலிருந்து இங்குவரும் வேளைகளில் அவர்களிடம் சேவையில் உள்ள நிறை, குறை, தேவைப் படும் பொருள் விடயங்கள் பற்றி யெல்லாம் விலாவாரியாக வெளிப்படையாக, ஒளிவுமறைவின்றி எடுத்துரைத்து கடமை ஒன்றையே கண்ணாகக் கருதுபவர். விருந்தினர் பக்கத்துக்காக அவர் பகிரும் கருத்துக்கள்:

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் எமக்குள்ள வளங்களைக் கொண்டு நாம் திறம்பட செயலாற்றுகின்றோம்.

கவில்லை. நிதி நெருக்கடி காரணமாக புதிய நியமனங்கள் வழங்கப்பட முடியாதுள்ளது எனினும் காலப்போக்கில் நிலைமை சீரடையும் என நம்புவோம். மேற்படி ஊழியர் பற்றாக்குறை யால் நிறைவான சேவை செய்வது இயலா துள்ளது என்பதே உண்மை நிலையாகும்.

சில பகுதிகளுக்கு பஸ்சேவைகள் நடத்தப்படுவதில்லை எனக் குறை கூறப் பட்டாலும், உண்மையில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உள்ளன. உதாரணமாக, மண்டைதீவுப் பகுதிக்குப் போக்குவரத்து வசதி செய்யப்படவில்லை எனக் கூறப்படு கின்றது. மண்டைதீவுப் பகுதியில் இன்னமும் மக்கள் குறிப்பிடத்தக்களவு மீளக் குடியேற வில்லை. அத்துடன் பஸ்கள் தமது முகாமை அண்மித்துச் செல்லாமல் வயல் பாதையூடா கவே சுற்றிச்செல்ல வேண்டும் எனப் படைத்

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நடைபெறு கின்றன. ஆனாலும் காலை வேளைகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு சேவைகளை நடத்துவது இயலாதுள்ளது. காலையில் 33 சேவைகள் பாடசாலைகளுக்கென நடாத்தப்ப டுகின்றது. காலை 8.30 மணிக்குப் பின்னரே முகமாலைக்கான பஸ் சேவை சீர்நிலைக்கு வரும். மக்கள் காலை வேளை இந்த அசௌகரியத்திற்கான உண்மைக் காரணத் தைப்புரிந்து, பொறுத்துக் கொள்ளவேண்டும், பாடசாலை சேவைகளும் தவிர்க்க முடியாதவையல்லவா? நிலைமை புரியாது எம்மீது ஒரு சிலர் களங்கம் கற்பிக்க முனைவது அபத்தமானது, அறியாமையி லானது என்பது என் தாழ்மையான



**எஸ்.மணிவாசகன்**
பொதுமுகாமையாளர்
(வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

கருத்தாகும்.

தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரிக்கென திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் 6 பஸ் சேவைகள் மாணவர் நலன் கருதி எம்மால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு பஸ் பொதுமக்களின் பாவனைக் கானது. அதுகூட மாணவர் சேவைக்கென ஈடுபடுத்தப்படுகிறது. இதில் பெற்றோரும் பயணிக்கலாம். அம்பனைச் சந்தியிலிருந்து மகாஜனாக் கல்லூரிவரை பஸ்களில்

மாணவர்களைத் தவிர பொதுமக்கள் பயணிக்க படையினர் அனுமதி மறுத்துள்ளனர். தெல்லிப்பளைக் காவலரணில் இருந்து யூனியன் கல்லூரி வரையுமே பெற்றோரும் பஸ்ஸில் இணைந்து செல்ல அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

மேலும் அக்டோபர் முதலாம் திகதி முதல், (749இலக்க பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து சண்டிலிப்பாய், ஆலங்குழாய், மாகியப்பிட்டி, அளவெட்டி ஊடாக தெல்லிப்பளை செல்வது) யூனியன் கல்லூரிவரை நீடிக்கப் பட்டுள்ளது. இவ் பஸ் முன்னர் தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில்வரை சேவையி[l] ஈடுபட்டது. காலை, பிற்பகல் இச்சேவைக[l] நிகழும். அத்துடன் இங்கு குறிப்பிடப்ப[l] வேண்டிய மற்றொரு பிரதான விடயம், யூனியன் கல்லூரி மாணவ, மாணவிகள் மாதாந்தப் பருவகாலச்சீட்டு (ஸீசன் ரிக்கற்) எம்மிடம் பெறுகிறார்கள். எமது விதி முறைப்படி எவர் கேட்டாலும் இச்சீட்டை வழங்க முடியாது எனக் கூறமுடியாது. ஆனால் இச்சீட்டு வைத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு (யூனியன் கல்லூரியைப் பொறுத்த வரை) தற்போதைய சேவையை விட கூடுதலான சேவையை நடத்தும் நிலையில் நாம் இல்லை. பஸ் பற்றாக் குறையின் விளைவான எமது இக்கட்டான நிலைமை புரிந்து கொள்ளப்பட வேண்டும். எமது சக்திக்குட்பட்டதைத் தானே எம்மால் செய்யமுடியும்.

எமது பஸ் நிலையங்களில் ஓட்டோக்கள், தனியார் கார்கள், மினிபஸ்கள், சைக்கிள் கள் என்பன நுழைகின்றன. இதனால் எமது பஸ்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. சம்பந்தப்பட்ட பிரதேச சபை, நகரசபை ஆகியவற்றுக்கு முறையி[l] டும் அவை அலட்சிய மனப்போக்குடன் இ[l] ந்து வருவது கவலை தருகிறது.

# விருந்தினர் பக்கம்

தற்போது 142 பஸ்கள் உள்ளன. 137 பஸ்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் 102 பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தக்கூடியன. இவற்றில் 10 பஸ்கள் படைத்தரப்பினரின் பாவனைக்கென எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பல பஸ்கள் உள் இயந்திரங்கள் மற்றும் முக்கிய உறுப்புகள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றன. மக்களுக்கு முழுமையான சேவை கிடைக்க வேண்டுமென்பதற்காக நாம் இவ்விடயம் பற்றி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு வருகி றோம். இவை எமக்குக் கிடைத்தாலே திருப்தி யான சேவை புரிவது சாத்தியமாகும்.

சாரதிகள், நடத்துநர்கள், நேர சூசிகையாளர்கள் ஆகிய பணிகளிலும் போதியவர்கள் இல்லை. சேவையிலிருந்து இளைப்பாறு வோர்க்குப் பதிலாக எவரும் மேற்படி பதவி களுக்கு நியமிக்கப்படவில்லை. இதுபற்றி மேலிடத்தின் கவனத்துக் கொண்டு வந்துள் ளோம். இதுவரை சாதகமான பதில் கிடைக்

தரப்புக் கூறியுள்ளது. அது மிகச் சிரமமான பாதை, அத்துடன் நீர்தேங்கினால் பஸ்சில்லுகள் புதைந்துவிடும். மேலும் அப்படியே சேவை நடத்தப்பட்டாலும் கூட ஒருவர், இருவர் என்றே பயணிகள் இருப்பர், பலதடவைகள் பயணிகள் இன்றியே சேவை நடைபெற்றுள்ளது. இது எமது முன்னைய அனுபவம்.

மண்டைதீவுப் பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்பும் பட்சத்தில் படைத் தரப்பின் கெடுபிடி தளர்த்தப்படும் சூழ்நிலையில்தான் மீண்டும் இச்சேவை சாத்தியப்படும் என்பது யதார்த்தம். மக்கள் நலனை அலட்சியப்படுத்துவது எமது நோக்கமல்ல. இவ்விடயத்தில் எம்மைக் குற்றம் காண முனைவது ஏற்புடையதல்ல. மண்டைதீவில் நிரந்தரவாசிகளே வசிக்க முடியும், வெளியார் அனுமதி பெறவேண்டுமென்கிறது படைத் தரப்பு.

முகமாலைப் பகுதிக்கான பஸ் சேவைகள் ஒரு ஒழுங்கமைப்பின் அடிப்படையில் குடா

இதே வேளை - மிதிப்பலகைப் பயணம் செய்தால் சாரதி, நடத்துநரிடம்கூட அபராதம் அறவிடப்படும் என பகிரங்க அறிவித்தல் பஸ்களில் ஒட்டப்பட்டு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சில தனியார் பஸ்களில் திரையிசைப் பாடல்கள் என்ற பெயரில் - இரட்டை அர்த்தம் கொண்ட மூன்றாம் தரப்பாடல்கள், குறிப்பாக யுவதிகளைக் கிண்டல் செய்பவை ஒலிநாடா மூலம் ஒலிபரப்பப்படுகிறது. ஆனால் நாம் - மக்களுக்கான உற்சாகமளிப்பு என்ற பெயரில் விஷவிதை அவர்கள் நெஞ்சில் (குறிப்பாக இளஞ் சந்ததியினர் மத்தியில்) விதைக்கப்படுவதை எமது நிர்வாகம் ஒரு போதும் அனுமதிக்காது. எனவே இதனை இப்போது முற்றாக நிறுத்தி விட்டோம்.

எமது சக - உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் முழுமையான ஒத்துழைப்பு முழுமையாக எனக்குக் கிடைக்கிறது. மனப்பூர்வமான இந்த ஒத்துழைப்புடன் மேலும் எம் சேவையை வலுப்படுத்த முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்குள்ளது.

நேர்காணல் :~ஸ்ரீ

# எங்கும் நிறைந்த இறைவனை வாழ்த்துவோம்! வணங்குவோம்!



எங்கும் நிறைந்தவன் இறைவன், இறை என்ற சொல் "இறு" என்ற பகுதி அடியாகப்பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணானந்தமே"

இவ்வண்ணமாக இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"

-மணிவாசகர்-

பாலில் நெய் மறைந்திருப்பதுபோல், பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந் திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண் ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டு இருப் பதுபோல், ஞானிகள் உள்ளத்திலும், திருக் கோயிலிலும் இறைவன் விளங்கி காட்சிய ளிக்கின்றான்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங் கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர் களாலும் நிறுவப்பெற்ற காரணத்தினால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி வேண்டிய வரங் களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவி யிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவதுபோல, எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக் கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூல மாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறைவழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்"

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

நம்மிடைப்பலரும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? என்ற வினாக் கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடைகாண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன, உலாவுகின்றன, வம்சத்தைவளர்க்கின்றன, மனிதர் களாகிய நாமும் உண்ணுகின்றோம், உறங் குகின்றோம். மக்களைப் பெறுகின்றோம். இரையானது விலங்குகட்கும், மனிதர்கட்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. விலங் களைவிட மனிதன் உயர்ந்து காட்சியளிப் பது தெய்வ உணர்ச்சி ஒன்றாலேயேதான்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தசீ சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்ந்த மாமலர் தூவித்துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே

என அப்பர் பெருமான் இறைவன் நமக் குத் தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்துவிட்டு அக்கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச்செய்தார்.

எனவே காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

கவிமாமணி
**காரை.எம்.பி.அருளானந்தன்**
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

# வணிகர் கழகத்தின் கட்டாய அறிவுறுத்தல்

(நாயன்மார்கட்டு)

யாழ். வர்த்தகப்பெருமக்களால் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து யாழ்ப்பாணம் வணிகர்கழகம் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளது.

சகல வர்த்தக நிலைய உரிமையாளர் களும்/முகாமையாளர்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களை சனிக்கிழமைகளில் பிற்பகல் 3.00ற்கு (புதிய நேரம்) பின்பும், ஞாயிறு, போயா மற்றும் சகல வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும். இத்தினங்களில் வர்த்தக நிலையங்களில் திருத்த வேலை, இருப் பெடுத்தல் போன்றவை செய்ய வேண்டுமாயின் யாழ். வணிகர் கழகத்தின் முன் அனுமதி பெற்று அதற்கென வழங்கப்படும் அறிவித்தல் பலகையை தொங்கவிட்ட பின் வியாபாரம் செய்யாது அவ்வேலையை செய்யலாம்.

ஹோட்டல்கள் தேனீர்ச்சாலைகள், மருந் துக்கடைகள், புதினப் பத்திரிகைக் கடைகள், தொலைபேசி சேவை மட்டும் நடாத்தும் ஸ்தாபனங்கள், வீடியோ கடைகள், பழவகை விற்கும் கடைகள்,மரக்கறிவகை மட்டும் விற்பனை செய்யும் கடைகள் ஆகியன மட்டும் விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கலாம் எனவும் வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சகல பெண் ஊழியர்களும் பி.ப.5.30மணிக்குப்பின் கடமையில் ஈடுபடுத் தப்படலாகாது என்றும், மேற்குறிப்பிட்ட அறி வித்தலுக்கு அமைய நடக்கத்தவறும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீது ரூபா 1000 தண்டப்பணமாக அறவிடப்படுமென்றும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (61)

# இளவாலை, பெரியவிளான் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கத் துரித ஏற்பாடு!

பெரியவிளான், இளவாலைப் பகுதிகளுக்கு 24 மணிநேரம் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளவாலைப் பகுதிக்கு 'கூல்எயார்' நிறு வனம் மட்டுப்படுத்தப்பட்டளவில் மின்சாரம் வழங்கி வருகின்றது. ஆனால் பெரியவிளான் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப் படவில்லை. இதுகுறித்து பெரிய விளான் பகுதி மக்கள் மின்சார சபைக்கு முறையிட் டதையடுத்து இந்நடவடிக்கையானது எடுக் கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புப் பகுதிக்கு ஏற்கனவே 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருகின் றது. தற்போது பண்டத்தரிப்பு பகுதியிலிருந்து பெரியவிளான், இளவாலைப் பகுதிகளிற்கும் 24 மணிநேர மின்சாரம் வழங்கும் முகமாக பண்டத்தரிப்பிலிருந்து இளவாலை வரும் பிர தான வீதியில் சேதமடைந்து, பழுதடைந்த நிலையில் இருக்கும் மின்கம்பங்கள் பிடுங் கப்பட்டு புதிய மின்கம்பங்கள் நடுவதற்கான நிலையங்கள் குறிக்கப்பட்டுள்ளன. மிக விரை வாக இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்கான மற்றைய வேலைகள் ஆரம்பிக் கப்படவுள்ளன கூறப்படுகின்றது. (41)

## மீசாலைக்கு மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை

(சாவகச்சேரி)

மீசாலைப் பகுதியில் மின்கம்பங்கள் புதிதாக நாட்டப்பட்டபோதும் மின்சார[ம்] வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்க[ள்] விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்தகால யுத்தங்களினால் பாதிப்புக் குள்ளான மின்கம்பங்களை அகற்றி புதிதாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டது. ஆனால் இன்னும் அப்பகுதிக்கு மின்சாரம் வழங்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (34)

# அரசியலமைப்பு திருத்தங்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடக்கலாம்

## கொழும்பு சட்ட வட்டாரங்களில் ஊகம்

(கொழும்பு நிருபர்)

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் அரசியலமைப்பின் 18ஆம், 19ஆம் திருத்தங்களைச் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலையே ஏற்படலாம் என கொழும்பிலுள்ள சட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை அரசியலமைப்பு திருத்தங்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட 34 மனுக்களையும் விசாரணை செய்து வந்த - சரத் என். சில்வா தலைமையிலான ஏழு நீதிபதிகள் குழு நேற்றுத் தனது விசாரணைகளை முடித்துக் கொண்டது.

இந்த விசாரணைகளின் அடிப்படையிலான தீர்ப்பு ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற சபாநாயகருக்கும் இரகசியமாக அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய விசாரணைகளில் பேசிய நீதியரசர் சரத் என்.சில்வா அரசியல் அமைப்பு திருத்தங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் கலந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி.ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உட்பட 34 பேர் தாக்கல் செய்த திருத்த எதிர்ப்பு மனுக்களை -

மேற்படி திருத்தங்கள் யாவுமே சர்வ ஜன வாக்கெடுப்பின் அடிப்படையிலேயே அமைய வேண்டுமெனக் கோரியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## தமிழ் அரசியல் கைதிகளை.......

தென்னிலங்கைச் சிறைகளிலே போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற இளைஞர் யுவதிகள் பல தடைகளை அகிம்சை வழியிலே சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்திய வேளைகளிலே அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதி பல்வேறு அமைச்சர்களாலும் சிறிலங்கா அரச தரப்பினராலும் காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட போதும் இவ்வாறான வாக்குறுதிகளெதுவும் அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின் அமைதியான சூழல் கடந்த எட்டு மாத காலமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் தாம் இன்னமும் விடுவிக்கப்படாது இருப்பது குறித்து தமிழ் கைதிகள் ஏமாற்றமும் வேதனையும் அடைந்துள்ளார்கள். இதன் காரணமாக தென்னிலங்கை சிறைகளிலே வாடுகின்ற தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தம்மை உடனடியாக விடுவிக்கக் கோரி கடந்த 1ஆம் திகதியில் இருந்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி வருகின்றார்கள்.

பல வருடங்களாக தொடர்ச்சியாகச் சிறை வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக இவ்விளைஞர் யுவதிகள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளதுடன் தமது எதிர்காலம் குறித்து எது வித நம்பிக்கையும் அற்றவர்களாக விளங்குகின்றார்கள். இந்நிலை தொடருமாக நீடித்தால் அவர்களின் எதிர்கால வாழ்வு சூனியமாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கை சிறைகளில் வாடுகின்ற இந்தத் தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் நீதியான நியாயமான உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்காவின் புதிய அரசானது அவர்களின் விடுதலையை விரைவுபடுத்த தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டிக்கொள்கிறோம்.

தற்போது ஏற்பட்டிருக்கும் இச்சமாதான சூழலில் தமிழ் மக்கள் மேலும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைப்பதற்கு தமிழ் இளைஞர் யுவதிகளின் உடனடி விடுதலையானது வழிசமைக்கும் என்று நம்புகிறோம்.

தென்னிலங்கைச் சிறைகளிலே நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர் யுவதிகள் தமது விடுதலையை வேண்டி தற்போது மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனித உரிமை அமைப்புக்கள், வெகுஜன அமைப்புக்கள் போன்ற அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி அவர்களின் விரைவான விடுதலைக்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எச்சரிக்கை சுவரொட்டி

(இடைக்காடு)

வளலாய், இடைக்காடு, தம்பாலை, வருணன் கதிரிப்பாய் ஆகியன உள்ளிட்ட அச்சுவேலி கிராமப் பகுதிகளில் உள்ள சுவர்களில் மது அரக்கனை ஒழிப்போம்,கசிப்பு விற்பவர்களுக்கு தண்டனை வழங்குவோம் போன்ற வசனங்களை எழுதி எச்சரிக்கை செய்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(76)

## மாடியிலிருந்து வீழ்ந்து நகைத்தொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கள் இரவு ஒன்பது மணியளவில் கஸ்தூரியார் வீதி ராஜா திரையரங்கிற்கு அருகிலுள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் மேலிருந்து தவறி வீழ்ந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மறுநாள் மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில் மட்டக்களப்பு பாண்டிருப்பைச் சேர்ந்த நகைத்தொழிலில் ஈடுபட்டு வந்தவரான சிவா (வயது 33) என்பவர் மதுபோதையில் மாடியிலிருந்தவர்களுடன் வாய்ச்சச்சரவில் ஈடுபட்டுவிட்டு படுக்கைக்குச் செல்லும் வேளையில் இடம்தவறி மாடியிலிருந்து கீழே விழுந்தார் எனத் தெரிய வருகின்றது. வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பொலிஸாரின் விசாரணைகள் முடிவடைந்தபின் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

(61)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரின் எட்டாவது தொடர் இன்று பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. 'சைவ வாழ்வில் பெண்கள்' என்ற கருப்பொருளில் யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி கலைவாணி இராமநாதன் உரையாற்றவுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 18ஆம் திகதி முதல் பண்ணிசை வகுப்புகளில் பங்குபற்றியோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

# அதிர்ஷ்ட வாரம்

**04.10.2002 முதல்**
**10.10.2002 வரை**



### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பெரும்பாலும் நன்மையாகவே காணப்படுகின்றது. தேகசுகம் நன்று. வார இறுதியில் பித்த சம்பந்தான நோய்கள் வரலாம். அன்றாட செயல்கள் யாவும் உற்சாகத்துடன் செயவார்கள். மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக அமையும். பணவரவு மிகவும் நன்று. சகோதர உறவு சிறப்பாக அமையும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். புத்திரரால் கவலை. கணவன் மனைவி கவலையடைதல். பிதாமாதாக்களுக்கு நி[...]தியான வாரம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரமல்ல.



### இடபம்

கார்த்திகை, 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்ததாகவே காணப்படுகின்றது. தேகசுகம் நன்று. வீட்டிலும் சரி பொதுவேலைகளிலும் சரி எடுத்த காரியம் வெற்றியாகவே முடியும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பாகவே அமையும். தொழில் ஸ்தானத்தில் ஒருசிலரது உள்ளத்தில் போட்டியுணர்வுகள் தோன்றலாம். பொருளாதாரக் கஷ்டம். கடன்காரரின் நெருக்கடி முதலியன இருக்கும். பிதாவின்[...]கம் நன்று. மாதாவின் உடல் நிலை தேறுதல் அடையும். கணவன் மனைவி சுகம் மத்திமம். புத்திரரால் மனஸ்தாபம். வார இறுதியில் வழக்குகளின் தொல்லை வரலாம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம். முருக வழிபாடு செய்யவும்.



### மிதுனம்

மிருகசீரிடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பெரும்பாலும் நன்மையாகவே காணப்படுகின்றது. தேகசுகம் நன்று எனினும் கண்ணில் சிறிய நோய் தோன்றலாம். வீட்டிலும் பொதுசேவைகளிலும் திறமையாகவே செயற்படுவர். பண வரவு நன்று. தொழில் முன்னேற்றம். பிதாவுக்கு சுகயீனம். மாதாவின் தேகசுகம் நன்று. பிள்ளைகளின் திருமணப் பேச்சு முன்னேற்றமடைதல். கணவன் மனைவி மகிழ்ச்சி. மாணவர்களுக்கு சிறந்த வாரம். பொது வாழ்வில் கௌரவம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### கர்க்கடகம்

புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், அயிலியம்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்ததாகவே காணப்படுகின்றது. தேகசுகம் நன்று. செய்தொழில் மேன்மையடைதல். தொழில்ஸ்தானத்தில் பிரகாசமடைதல். பொருளவரவு நன்று. மாணவர்களுக்கு இவ்வாரம் மனம் சோர்வடையும் தன்மை தோன்றலாம். பிதாவுக்கு சிறிது சுகயீனம். மாதாவின் தேகசுகம் நன்று. பிள்ளைகளுக்கு திருமணப் பேச்சுக்கள் நெருக்கத்தில் உள்ளது. மனைவி வழி உறவினர் உறவு வலுவடைதல். வர்த்தகர்களுக்கு சிறப்பான வாரம்.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர்
அவர்களின்
சகோதரரின் புத்திரர்
**இ.வெங்கடேச ஐயர்.**



### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மையானதாக தென்படவில்லை. கண்ணில் நோய். எடுத்த காரியம் தாமதமடைதல. ஆனால் தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றமடைதல். மற்றவர்களால் ஏமாற்றம் அடைதல். பெருளாதாரக்கஷ்டம். வீண்பகை. மாதா பிதா தேகசுகக்குறைவு. பிள்ளைகளுக்கு திருமணப்பேச்சு தாமதமடைதல். மனைவிக்கு சினேகித உறவினால் மகிழ்ச்சி. வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.



### கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறந்த வாரமாக தென்படவில்லை. தேகம் நன்றாக இராது. உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வரலாம். வீண் அலைச்சல். பொருளாதார நிலை சிறப்பாக அமையும். மாணவர்களுக்கு சிறந்த வாரம். பிரயாணம் செய்வது கவனமாக இருத்தல் வேண்டும், அத்துடன் நெருப்புடனும் ஆயுதத்துடன் பழகுவது கவனமாக இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றம் காண்பதாக இருக்கும். கணவன் மனைவியின் தேகசுகம் நன்று. தொழில்ஸ்தானத்தில் தொழில் செய்வது கஷ்டமாக இருக்கும். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, வீசாகம் 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு நன்மையும் தீமையும் கலந்ததாகவே காணப்படுகிறது. தேகசுகம் நன்று, எடுத்த கருமம் சிறப்பாக நிறைவேறும். தொழில்ஸ்தானத்தில் தேவையற்ற குறுக்கீடுகள் வரலாம். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும், மாணவர்கள் கல்வியில் மனச்சோர்வுடன் காணப்படுவர். பிதா மாதா சுகயீனம். வைத்தியச் செலவு, அயலவர்களுடன் அமைதியுடன் காலம் கழிக்கவும் பிள்ளைகளின் திருமண விடயத்தில் தாமதம் காணப்படும். கணவன் மனைவி தேகசுகம் நன்று வர்ததகர்களுக்கு சிறந்த வாரமாக தென்படவில்லை.



### விருச்சிகம்

விசாகம்- 4, அனுஷம், கேட்டை

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாகவே தென்படுகிறது. தெய்வ வழிபாடு நிறைந்ததாகவே இருக்கும். தேகசுகம் நன்று. எடுத்த காரியம் சிறப்பாக அமையும். தொழில் ஸ்தானத்தில் சகஊழியர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு சிறந்த வாரம். கௌரவம், மரியாதை.பெண்களால் செலவு. பிதாவின் சுகம் நன்று. மாதாவிற்கு சிறிது சுகயீனம். கணவன் மனைவி தேகசுகக் குறைவு. பிள்ளைகளின் திருமண விடயம் நன்றாக இருக்கும் பொது சேவையில் கௌரவம், கடன் நீங்கும், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.



### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பெரும்பாலும் நன்மையானதாகவே காணப்படுகின்றது. தேகசுகத்தில் அவதானம் வேண்டும். செய்தொழில் வீட்டிலும் பொது சேவையின் குறுக்கீடுகள் மத்தியிலும் சிறப்பாக அமையும். மாணவர்களுக்கு சிறப்பான வாரம். வெளியூர் பயணச் சிந்தனை உருவாகலாம். பிதாதேகசுகம் நன்று. மாதாவிற்கு தேகசுகம் சிறிது பாதிப்படையலாம். கணவன் மனைவி தேகசுகம் நன்று பிள்ளைகளின் திருமணவிடயம் வேகம் குறைவாகவே காணப்படுகின்றது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு. வர்த்தகர்களுக்குச் சிறந்த வாரம்.



### மகரம்

உத்தராடம்,1,2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான வாரமாக அமையவில்லை. தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களிடையே போட்டிகள் உருவாகலாம். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் வேண்டும். பிதா மாதா சுகயீனம், கணவன் மனைவி தேகசுகம் நன்று, பிள்ளைகளின் திருமண விடயம் தாமதமாகவே காணப்படும். கடன் நெருக்கடி, சுப கருமங்களில் பங்கு பற்றல், வர்த்தகர்களுக்குச் சிறந்த வாரம்.



### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், புரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான வாரமாக அமையவில்லை. தேகசுகத்தில் அக்கறை எடுத்தல் வேண்டும். செய்தொழில் முன்னேற்றம் இல்லை. தொழில் ஸ்தானத்தில் தொழில் செய்ய மனமில்லை மாணவர்கள் கல்வியில் நாட்டமில்லை. பிதா மாதா சுகயீனம் கணவன் மனைவி சுகயீனம். பிள்ளைகளின் திருமண விடயம் முன்னேற்றமாக இருக்கும். பிரயாணத்தில் நிதானம் வேண்டும். நெருப்புடன் பழகுவது கவனம் சிறு காயங்கள் வருதல். தேவையற்ற பிரச்சனை தேடிவருதல். அயலவர்கள் ஒற்றுமை பேணப்படுதல் வேண்டும். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரமல்ல.



### மீனம்

புரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்ததாகவே காணப்படுகின்றது. தேகசுகம் நன்று. செய்தொழில் மேன்மை. தொழில் ஸ்தானத்தில் சிறப்பு. மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிதா மாதா சுகயீனம். கணவன் மனைவி தேகசுகம் நன்றல்ல வைத்தியச்செலவும் ஏற்படலாம். பிள்ளைகளின் திருமணம் முன்னேற்றமாக இருக்கும். பொருள் வரவு. வீண் பழிகேட்டல். மனச்சஞ்சலம். வர்த்தகர்களுக்குச் சிறந்தவாரம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க உரையாற்றுவதையும் பங்கு பற்றியோரையும் படங்களில் காணலாம்.

## வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர்வு

# இராணுவத் தளபதிக்கு காலக்கெடு தவறின் வெகுஜனப் போராட்டம்!

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் வலிகாமம் வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான மீள் குடியேற்றத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு இராணுவத்தினரின் அனுமதி கிடைக்காத நிலையில, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மீள் குடியேற்றத்துக்கு உடன் அனுமதி வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியும் வெகுஜனப் போராட்டத்தை அடுத்த இரு வார அவகாசத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களின் மீள குடியேற்றத்திற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனுமதிகோரி இராணுவத் தளபதிக்கு இவ்வமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பி - கடந்த 25ஆம் திகதிக்கு முன்பதாக ஆக்கபூர்வமான பதில் அனுப்புமாறு கேட்டிருந்தது. ஆனால் இராணுவத் தரப்பிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பொது அமைப்புகளின் தலைவர் சி.குமாரவேல் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிர்வரும் 18ஆம திகதிக்கு முன்னர் இராணுவத் தளபதியிடமிருந்து சாதகமான பதில கிடைக்காவிட்டால் - வலிவடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வெகுஜனப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களாக வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மக்களின் விவசாய அமைப்புகள், சமயரீதியான சங்கங்கள், சமூக நிறுவனங்கள் என்பன இவ்விடயத்தில் பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்திருந்தும் எவ்வித குறிப்பிடத்தக்க பலன்களும் எட்டப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதியுடன் மாவட்ட இராணுவ அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட மாநாடுகள் நடத்தப்பட்டிருப்பினும் முடிவுகள் எதுவும் மீள் குடியேற்றத்துக்குச் சாதகமாக எட்டப்படவில்லை. முதலில் தெல்லிப்பழையில் நடத்தப்பட்ட மாநாட்டையடுத்து இராணுவத்தினரின் பாதுகாப்பு அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் இது என்று கூறிய யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இதில் முடிவுகளைக் கவனமாகவே மேற்கொள்ள வேண்டும் என தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூறினார்.

# களுத்துறை கைதிகளின் நிலைபற்றிப் பேச சட்டமா அதிபர் கமலசபேசன் பின்னடித்தார்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறுகின்றார்

(கொழும்பு நிருபர்)

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை பற்றிப் பேச நேற்று மாலை வரை தான் தயாராக இருந்தபோதும், முதல் பேசச் சம்மதித்த சட்ட மா அதிபர் கமலசபேசனுடன் பின்னர் தொடர்பு கொள்ளமுடியாது போனதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நமது கொழும்பு நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அதிகாரம் தன்னிடம் இல்லை என்றும் -

தனியே தமிழ் அரசியற் கைதிகளுக்கான பாதுகாப்பு விடயங்களையே தனது அதிகாரத்திற்குட்பட்ட வரையறைகளுக்குள்ளேயே கையாள முடியும் என்றும் அவர் நமது நிருபரிடம் கூறினார்.

இதேவேளை - தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை தாமதமாவதற்கு சட்டமா அதிபரின் செயற்பாடுகளும் காரணம் என தமிழ்க் கூட்டமைப்பினர் குற்றஞ் சாட்டியிருந்தமையும் தெரிந்ததே.

## அமெரிக்க...

இராணுவத்தளம் கைப்பற்றப்பட்டதையடுத்து 1996இல் நொச்சி மோட்டைப் பகுதியில் அமெரிக்க இராணுவச் சீருடையில் அமெரிக்க இராணுவத்தின் மேற்படி பயிற்றுவிப்பாளர் பிரிவைச் சேர்ந்தோர் காணப்பட்டதாக நமது வன்னிப் பிராந்தியச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

## கைதிகள்...

வல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று சட்ட மா அதிபர் கமலசபே சனைத் தொடர்புகொண்டு கைதிகள் விவகாரம் குறித்து ஆராயப் பல தடவைகள் முயற்சித்த போதிலும் சட்ட மா அதிபரைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை எனத் தெரிய வருகின்றது.

# புலிகளின் செயற்பாடுகளுக்கு கூட்டணி முழு ஆதரவு தரும்!

## இரா.சம்பந்தன் யாழ்.நகரில் பேச்சு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அனைத்துக்கும் கூட்டணியினர் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என- தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் தமிழக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று இரவு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தொடர்ந்து பேசிய சம்பந்தன் - கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகளை தீர்ப்பதற்காக தான் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## காணாமற்போன...

யாக அணிந்திருந்த முழுநீளச் சட்டை அவரது உள்ளாடை மற்றும் வூல் பாண்ட் என்பனவும் காணப்பட்டதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

எலும்புக்கூடு சிறுமியின் வீட்டிலிருந்து நான்காவது காணியில் பற்றைகளுக்கிடையில் காணப்பட்டதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்

இதுபற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் எலும்புக்கூடு மற்றும் ஆடைகளை வீடியோ எடுத்துச் சென்றுள்ளனர். தற்போது இந்த எலும்புக்கூடு வவுனியா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட நீதிபதி எம். சிற்றம்பலம் முன்னிலையில் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த எலும்புக்கூடு தொடர்பான மேலதிக விடயங்களை ஆராய்வதற்கு ஏதுவாக இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்காக பேராதனைக்கு அனுப்புமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்விடயம் அப்பிரதேசத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வவுனியா கோயில்குளத்துக்கு கிழக்காக உள்ள முருகனூர் என்ற சிறிய கிராமத்தில் வசிக்கும் கூலித் தொழில் செய்யும் ரகுலேந்திரன் என்பவருடைய இரண்டாவது பிள்ளையான சசிப்பிரியா (வயது 11) கடந்த மார்ச் 13ஆம் திகதி அன்று காணாமல் போயிருந்தார். இச்சிறுமி வவுனியா கோமரசம் குளம் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்பவர்.

காணமற்போன இச்சிறுமியை பெற்றோரும் அயலவரும் அயற்பிரதேசங்களிலும் வேறு அண்மித்த பகுதிகளிலும் தேடினர். ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்திலும் போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்திலும் மனித உரிமைகள் காப்பு அலுவலகத்திலும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

பின்னர் இச்சிறுமியைத் தொடர்ந்தும் தேடியலைந்து திரிந்த இவரது மூத்த சகோதரன் ரகுலேந்திரன் லோகதிலீபன் (வயது 17) என்பவர் முன்னாள் தமிழ் ஆயுதக்குழுவொன்றைச் சேர்ந்த சோழன் என்பவரால் காணாமற்போன தங்கையிருக்கும் இடத்தைக் காட்டுவதாக கூட்டிச் செல்லப்பட்டார் என்றும் பின்னர் அவரும் காணாமற்போக நேர்ந்தது என்றும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

நாற்பத்தைந்து நாட்களின பின்னர் மட்டக்களப்பு செங்கலடியில் லோகதிலீபன் தனிக்கவிடப்பட்டார். அவர் வீதியிலுள்ள பெயர்ப்பலகையைப் பார்த்து வழிப்போக்கர்களையும் உதவிக்காக விசாரித்து விசாரித்து ஏறத்தாழ 43kmவரை நடந்து வெலிக்கந்த என்ற இடத்தை அடைந்து பின்னர் வவுனியா வந்து சேர்ந்துள்ளார்.

வவுனியா வந்துசேர்ந்த லோகதிலீபன் தன்னை முதலில் கூட்டிச்சென்ற சோழன் என்பவர் வவுனியாவிலுள்ள ஓர் ஆயுதக்குழுவில் இயங்கியவர் என்று கூறினார்.

தான், அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஒரு இடத்தில் கைத்துப்பாக்கிகளுடன் சிவில் உடைதரித்திருந்த மூன்று இளைஞர்களால் தடுதது வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தமிழில் உரையாடினர் என்றும் கூறினார்.

காணமற்போய் மீண்டுவந்த லோகதிலீபன், பொலிஸ் உத்தியோகத்தர், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், விடுதலைப்புலிகளின் அரசியல்துறையின் வவுனியா மாவட்டப் பிரிவினர் ஆகியோர் முன்னிலையில் தனக்கு நேர்ந்த அவலத்தை விபரித்திருந்தார்

காணாமற்போன சிறுமி சசிப்பிரியாவின் எலும்புக்கூடு விவகாரம் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் நாளையும் விசாரணைகள் தொடரவுள்ளன.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கை செயலகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 95.93 | 96.45 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 150.21 | 151.72 |
| 1யூரோ | 94.23 | 95.44 |
| 1சுவிஸ் பிராங் | 64.50 | 65.68 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 51.72 | 52.85 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.67 | 25.67 |


## இதய அஞ்சலிகள்



மலர்வு 04 - 03 - 1964

உதிர்வு 03 - 10 - 2002

### திரு. நடராசா உதயகுமார்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாக சபை உறுப்பினரும் சிறந்த தொண்டருமாகிய திரு.நடராஜா உதயகுமார் அவர்கள் 03.10.2002 வியாழக்கிழமை மருதடியானின் திருப்பாதங்களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினரும் மனச்சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடியானைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் மருதடி
விநாயகர் ஆலய
நண்பர்கள்.

(சி/033)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04-10- 2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.